Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 22 2024

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 22, 2024 | ஒளி: 10 கதிர் 076 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## தேங்காய் விலை எகிறியது



சந்தையில் தேங்காயின் விலை வேகமாக அதிகரித்து வருவதாகவும், சில பகுதிகளில் தேங்காய் 180 முதல் 200 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர் .

தற்போது சந்தையில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம்



## "தடுக்க முயற்சி"

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாகக் கடந்த 5 வருடங்களாக சுயநினைவின்றி கோமா நிலையில் இருந்தவர்கள் தற்போது ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் குறித்து கேள்வி கேட்க ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து அரசாங்கம் முறையான விசாரணையை ஆரம்பித்த பின்னர் சிலர் குழப்பமடைந்துள்ளதாகவும் ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகள் இரகசியமானவை அல்ல எனவும் அவர் கூறினார்.

கட்டுநாயக்கவில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டு அறிக்கைகளும் சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், பொது பாதுகாப்பு அமைச்சு செயலாளர், கொழும்பு பேராயரின் செயலாளர் ஆகியோரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் தமக்கு அறிவித்ததாக ஜனாதிபதி தெரிவித்தார். எனவே, அவை இரகசிய அறிக்கைகள் அல்ல என அவர் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



## "ரவியை நீக்கு"

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவை பதவியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கோரிக்கை விடுத்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஏ.என்.ஜே.தி.அல்விஸ், ஜனாதிபதி விசாரணைக்குழுவின் அறிக்கையை பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில திங்கட்கிழமை (21) வெளியிட்டார். ஐ.எம்.இமாம் அறிக்கையை அடுத்த வாரம் திங்கட்கிழமை வெளியிடுவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏ.என்.ஜே.தி.அல்விஸ் அறிக்கையில், தற்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கு எதிராக பாரிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், தமது அரசியல் இலாபத்துக்காகவும் தமது சகாக்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவுமே இவ்விரு அறிக்கைகளையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வெளியிடாமல் இருக்கிறார்.

தொடர்ச்சி P2



## "தவறான முயற்சி"

கடந்த 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் மக்களைத் தவறாக வழிநடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட புதிய குழுவொன்று தற்போது விசாரணை தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

"முன்னாள் அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகளில் ஒன்று, ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அதே பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது என்றும் ஞாயிறு ஆராதனை ஒன்றில் உரையாற்றிய போது, பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். .

ஒரே திருப்பம் என்னவெனில், புதிய அறிக்கையானது, புதிய அரசாங்கத்தின் இரண்டு மூத்த அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்துள்ளது. குறித்த பரிந்துரைகள் தொடர்பான அறிவுரையை முன்னாள் அரசு வழங்கியிருப்பது இதில் தெரிகிறது" என்றார்.

தொடர்ச்சி P2

### பொதுத் தேர்தலை
## சவாலுக்கு உட்படுத்தி மனு

நவம்பர் 14ஆம் திகதியன்று பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த முடிவை எதிர்த்து சிவில் சமூக ஆர்வலர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்ட விதிகளுக்கு அமைய வேட்பு மனுக்களைக் கோருவதற்கும் பொதுத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழு தவறிவிட்டதாகக் கூறி, 'அபி ஸ்ரீலங்கா' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரியந்த ஹேரத் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

## 2 சொகுசு வாகனங்கள் கண்டியில் சிக்கின



கண்டி, அனிவத்த பிரதேசத்தில் முன்னாள் துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஆறு கோடி ரூபாய் பெறுமதியான BMW ரக கார் மற்றும் பிராடோ ரக ஜீப் ஒன்றை கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

கண்டி பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவிற்கு கிடைத்த தகவலின் பிரகாரம், பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க தலைமையிலான பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குழுவொன்று, அனிவத்தையில் அமைந்துள்ள வீட்டின் கேரேஜில் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களையும் கைது செய்துள்ளது.

தொடர்ச்சி P2



### பெருந்தோட்ட பாடசாலைகளைத் தரமுயர்த்தும்
## நன்கொடையை இரு மடங்காக அதிகரித்தது இந்தியா

இலங்கையின் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள 9 பாடசாலைகளை தரமுயர்த்துவதற்காக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நன்கொடை உதவித் தொகையினை இரு மடங்காக அதிகரிக்கும் நடவடிக்கைகளுக்கான முறைமைகளை உறுதிப்படுத்தும் இராஜதந்திர ஆவணங்களில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் கல்வி,

தொடர்ச்சி P2

## முடிவுக்கு வந்தது கடவுச்சீட்டு பிரச்சினை



விண்ணப்பம் செய்யப்பட்ட புதிய வெளிநாட்டுக் கடவுச்சீட்டின் ஒரு தொகுதி நாட்டை வந்தடைந்துள்ளது. அதற்கமைய கடவுச்சீட்டு விநியோகம் இடம்பெறும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.


இதன்மூலம் கடவுச்சீட்டுக்கு நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை முடிவுக்கு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## வன்னி வாக்கெடுப்பு: இன்று பரிசீலனை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்திற்கான வாக்கெடுப்பை இடைநிறுத்தி, இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி ஜனநாயக தேசிய கூட்டமைப்பு தாக்கல் செய்த மனுவை செவ்வாய்க்கிழமை(22) பரிசீலிக்க உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை (21) தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



### "IMFஉடன்படிக்கையில்
## திருத்த முடியாவிடின் எம்மால் திருத்த முடியும்"



எதிர்காலத்தில் அமைக்கப்படும் அரசாங்கம் தற்போதைய ஜனாதிபதியுடன் கைகோர்த்து சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்துகொண்ட உடன்படிக்கையில் திருத்தம் செய்து மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கொழும்பில் டெங்கு அதிகம்



நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக இம்மாத தொடக்கத்திலிருந்து தற்போது வரை 1,874 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இவ்வருடம் ஆரம்பித்து காலப்பகுதி வரை 41,285 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 17,549 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் அதிகளவான டெங்கு நோயாளர்களும் இம்மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

மேலும், யாழ். மாவட்டத்தில் 4,832 நோயாளர்களும் மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் 4,288 நோயாளர்களும், சப்ரகமுவ மாகாணம், கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 4,177 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## "பலமான கூட்டணி எமது கூட்டணி"

எஸ்.ஆர்.லெம்பேட்



தமிழ் மக்களுக்குத் தேசிய இனப் பிரச்சினை என்றொன்று இல்லையென அரசாங்கம் கூறிக் கொண்டுள்ள நேரத்தில் வடக்கு கிழக்கில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியைத் தவிர ஏனையவர்கள் தேசிய இனப் பிரச்சினை இல்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டுடன் இணைந்து செயல்பட்டு வருவதாக

தொடர்ச்சி P2



## பன்றிகளுக்கு சுகாதார சான்றிதழ் அவசியம்

பன்றிகளுக்குப் பரவி வரும் வைரஸ் நோய் காரணமாக, பன்றிகளைக் கொண்டு செல்வதற்கு, சுகாதார சான்றிதழ் கட்டாயமாக்க, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

பன்றிகளை ஏற்றிச் செல்லும் போது பிரதேசத்திற்குப் பொறுப்பான கால்நடை வைத்தியரிடம் சுகாதாரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வது கட்டாயம் என பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பன்றிகளிடையே இனப்பெருக்க மற்றும் சுவாச அமைப்பு தொடர்பான வைரஸ் நோய் பரவி வருகிறது மற்றும் பாதிக்கப்பட்ட பன்றிகள் மேற்கு, வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்கள் உட்பட பல பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## 'தடுக்க முயற்சி'

எனினும், அந்தக் குழுக்கள் விசாரணைக் குழுக்கள் அல்ல என்று கூறிய ஜனாதிபதி, விசாரணைகளை நசுக்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில குழுக்களை அமைத்தார் என்றும் கூறினார்.

மேலும், "இந்த இரண்டு குழுக்களும் ரணில் விக்ரமசிங்கவினால் அமைக்கப்பட்டவை. இவை விசாரணைக் குழுக்கள் அல்ல. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான செனல்-4 காணொளியின் அறிக்கையை ஆராய ஒரு குழுவும், பாதுகாப்புப் படையினருக்குத் தொடர்பு உள்ளதா? என ஆராய இரண்டாவது குழுவும் அமைக்கப்பட்டது. இந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய விசாரணைகளை நசுக்க ரணில் விக்ரமசிங்க இவ்வாறான சில குழுக்களை அமைத்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் புதிய விசாரணைகளை ஆரம்பிக்குமாறு புதிய அரசாங்கம், பொலிஸ் மா அதிபருக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்ட நபர் ஒருவர் கோமா நிலையில் இருந்து எழுந்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பில் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளது.

அத்துடன், அரசாங்கம் முறையான விசாரணையை ஆரம்பித்ததும் கோமா நிலையில் இருந்தவர்கள் விழித்துக்கொண்டனர். முறையான விசாரணைக்குப் பயப்படுகிறார்கள். இதை நாசப்படுத்த நினைக்கிறார்கள். அறிக்கைகளைப் பற்றிப் பேசுபவர் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க விரும்பவில்லை. உண்மையான குற்றவாளிகளை மறைப்பதே அவரின் உண்மையான நோக்கமாகும்.

அவரும் அவர்களின் ஒப்பந்தத்தில் உள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நாங்கள் அகப்பட மாட்டோம். நாம் முறையான விசாரணையை நடாத்தி உண்மையை மக்களுக்குத் தெரியப்படுத்துவோம். அந்த நபர் இவ்விசாரணைகள் நடைபெறுவதைத் தடுக்கவே முயல்கிறார். மறைக்க அல்லது பாதுகாக்க எங்களிடம் யாரும் இல்லை" என்றும் ஜனாதிபதி கூறினார்.

## "ரவியை நீக்கு"

அதற்கமைய ரவி செனவிரத்னவை பதவியில் இருந்து நீக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பொலிஸ் அதிகாரிகளிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது. முக்கியமாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது. எனவே, அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்தாமை மற்றும் அறிக்கைகளை மூடி மறைத்தமைக்காக ஜனாதிபதி பொது மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்த பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வருவோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் அண்மையில் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் SDIG ரவி செனவிரத்னவையும், மத்திய குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வுப் பணியகத்தின் பணிப்பாளராக முன்னாள் CID பணிப்பாளர் ஷானி அபேசேகரவையும் நியமித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## "தவறான முயற்சி"

இந்த இரண்டு அறிக்கைகளையும் தாங்கள் ஏற்கவில்லை என்று கூறிய பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித், தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்துவதாக தற்போதைய ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும், அது நிறைவேறுமா என்பதைக் காணத் திருச்சபை காத்திருப்பதாகவும் கூறினார்.

2019 ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான வெளியிடப்படாத இரண்டு அறிக்கைகள் குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்ததை அடுத்து கர்தினால் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## தேங்காய் விலை எகிறியது



தேங்காய் ஒன்று 80 முதல் 100 ரூபாய் வரையில் விற்பனையாளர்கள் கொள்வனவு செய்வதாகத் தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கொழும்பின் சில பகுதிகளில் ஆரஞ்சு பழம் ஒன்று 160 முதல் 200 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

## கொழும்பில் டெங்கு அதிகம்



மேலும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முடிவுக்கு வந்தது...

மேலும், விண்ணப்பம் செய்யப்பட்டுள்ள சுமார் 750,000 வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் விரைவில் தீர்ந்துவிடும். இதனால் மீண்டும் கடவுச்சீட்டு நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நிலையில், தடையின்றி கடவுச்சீட்டினை வழங்குவதற்கு தேவையான கொள்வனவு தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ள நிலையில் அதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது. அது தொடர்பான தீர்வு வெளியானவுடன் ஈ-பாஸ்போர்ட் வழக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## "திருத்த முடியாவிடின்...

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே சர்வதேச நாணய நிதியத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பல புரிதல்களை ஐக்கிய மக்கள் சக்தி எட்டியது. தற்போதைய ஆட்சியாளர்களாலும் இந்த இணக்கப்பாட்டை மாற்ற முடியாது போனாலும், ஐக்கிய மக்கள் சக்தியால் அதனைச் செய்ய முடியும் என்றார்.

தேர்தல் நடைமுறை என்பது ஒரு ஜனநாயக நாட்டின் முக்கிய அம்சமாகும். தேர்தல்கள் மூலம் நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, மாகாண சபை உறுப்பினர்களுக்கு மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரத்தை வழங்குகின்றனர். இந்த பெறுமதியான செயற்பாடு பாதுகாக்கப்பட்டு ஜனநாயகம் பேணப்பட வேண்டும். இந்த முறைமையினால் சாதாரண மக்களின் குரலுக்கு உரிய பெறுமதி கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொரல்ல தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எந்த தேர்தலை நடத்தினாலும் வங்குரோத்து நிலையில் கடனை அடைக்க முடியாத நாடாக இருந்து வருகிறோம். இந்த நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு சிறந்த வேலைத் திட்டமும் சிறந்த தொலைநோக்கு பார்வை கொண்ட கட்சியும், குழுவும் யாருடன் உள்ளனர் என்பதை இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் சிந்திக்க வேண்டும். 2028 முதல் கடனை செலுத்துவதற்கான ஒப்பந்தங்களில் முன்னாள் ஜனாதிபதியும் அரசாங்கமும் கைச்சாத்திட்டனர்.

2033இல் இருந்து கடனை கட்டலாம் என்று IMF கூறி இருந்த போதும், அரசாங்கம் அதை 2028 ஆக குறைத்துள்ளது. 2028 முதல் கடனை செலுத்த, போதுமான அந்நிய செலாவணி கையிருப்பு இங்கு இருக்க வேண்டும். ஆனால், இன்று ஒரு நாடாக நாம் கடினமான நிலையில் இருக்கிறோம். பொருளாதாரம் சுருங்கி, மக்களின் வாழ்வாதாரம் அழிந்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் நலிவடைந்துள்ள நிலையில், விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும். பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தத் தேசிய பொருளாதார திட்டமொன்று அமைந்து காணப்பட வேண்டும். இந்த தேசிய பொருளாதார திட்டத்தில், அன்னிய நேரடி முதலீட்டை ஈர்க்கும் வகையில் தேசிய கொள்கை திட்டம் அமைந்து காணப்பட வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் பொருளாதார வளர்ச்சி விகிதம் அதிகரித்து, நாடு வலுவடையும். இதன் மூலம் கடனை திருப்பி செலுத்தும் செயல்முறையைப் பலப்படுத்த முடியும். இது போன்ற பொருளாதார செயல்முறை முன்னெடுக்கப்படாவிட்டால் 2028 கடனை செலுத்த முடியாது. அவ்வாறு நடந்தால் 2028இல் இருந்து நம் நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை எட்டுவோம். நாட்டின் இளைஞர்கள் பற்றி சிந்திக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வலுவான பொருளாதார வளர்ச்சித் திட்டம் இருக்க வேண்டும். மேடைகளில் கூறுவது போன்று களத்தில் செயற்படுத்த வேண்டும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொரல்ல தேர்தல் தொகுதி அமைப்பாளர் ஜனக நந்த குமாரவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் பலர் கலந்து கொண்டனர்.

## நன்கொடையை இரு...

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலகா ஜயசுந்தர ஆகியோர் 2024 ஒக்டோபர் 18 ஆம் திகதி கைச்சாத்திட்டனர்.

அதற்கான இராஜதந்திர ஆவணங்களும் பரிமாறப்பட்டன. இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக இந்த மேலதிக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், இத்திட்டத்திற்கான இந்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த ஒதுக்கீடு 600 மில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரித்துள்ளது.

2.குறித்த ஒதுக்கீட்டின் அடிப்படையில், இலங்கை அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட 9 பெருந்தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மத்திய மாகாணத்தின் பெருந்தோட்டப் பகுதிகளில் 6 பாடசாலைகளும் ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணத்தில் தலா ஒரு பாடசாலையும் உள்ளடங்குகின்றன.

3.இலங்கையில் கல்விசார்ந்த முக்கிய துறைகளில் கடந்தகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள், அதேபோல தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி பங்குடைமை முயற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நீண்ட பட்டியலில் இந்தத் திட்டம் இணைந்துகொள்கின்றது. இலங்கையில் இந்தியா மேற்கொள்ளும் அபிவிருத்தி பங்குடைமை திட்டங்களில், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உபகரண விநியோகம் ஆகியவற்றுக்கான ஆதரவுக்குச் சமமாக, பயிற்சி மற்றும் திறன்-மேம்பாடு ஆகியவையும் முக்கிய கவனத்தைப் பெறுகின்ற விடயங்களாகக் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் 100க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் புனரமைப்புப் பணிகள், தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 40 இ-நூலகங்களை அமைத்தல், நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கு 110 பஸ்களை வழங்கல், நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் ஆங்கில மொழி ஆய்வகங்களை அமைத்தல், ருஹுணு பல்கலைக்கழகத்தில் உள்ள ரவீந்திரநாத் தாகூர் ஞாபகார்த்த கேட்போர் கூடம் உட்பட, நாடு முழுவதும் உள்ள பல நிறுவனங்களில் கேட்போர் கூடங்களைப் புதுப்பித்தல் மற்றும் நிறுவுதல், வடமத்திய மாகாணத்தில் பொலன்னறுவையில் பல்லின மும்மொழிப் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், மத்திய மாகாணத்தில் ஹட்டனில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் வந்தாறுமூலை மற்றும் ஓந்தாச்சிமடம் தொழிற்பயிற்சி நிலையங்கள் போன்ற பல தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு ஆதரவு, தென் மாகாணத்தில் காலியில் 200 பாடசாலைகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் கணினி ஆய்வகங்கள் அமைத்தல், உள்ளிட்டவை இப்பட்டியலில் உள்ளடங்குகின்றன இந்திய வம்சாவளி தமிழ் சமூகம் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் முகமாகக் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 750 மில்லியன் இந்திய ரூபா பல்துறை நன்கொடை உதவியின் கீழ் STEM பாடங்களுக்கான 3 மாத ஆசிரியர் பயிற்சித் திட்டமும் அண்மையில் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "பலமான கூட்டணி..

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் திங்கட்கிழமை(21) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு வடக்கு, கிழக்கில் இம்முறை போட்டியிடுகின்ற மிகப் பலமான கூட்டணியாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 'சங்கு' சின்னத்தில் போட்டியிடுகிறது.

அதேவேளை, இத்தேர்தலானது அதிகூடிய பாராளுமன்ற வேட்பாளர்களைக் கொண்டு வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்லுகின்ற ஒரு கூட்டணியாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்கிற விடயத்தில் பலமான ஒரு கூட்டணியாக எமது கூட்டணி காணப்படுகின்றது.

தமிழ் மக்களுக்குக் கடந்த 75 வருடங்களாக ஒரு தேசிய இனப்பிரச்சினை காணப்படுகின்றது. தேசிய இனப் பிரச்சினைக்காகப் பல வருடங்களாக அகிம்சை ரீதியாகவும்,ஜனநாயக ரீதியாகவும் தமிழ் மக்கள் போராடி உள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையை முன் நிறுத்தி நாங்கள் வடக்கு, கிழக்கில் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாங்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி இருந்தோம். மிகக் குறுகிய காலத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் எமக்கு வாக்களித்து உள்ளனர். அது இந்த பாராளுமன்ற தேர்தலில் இரட்டிப்பான ஆதரவைத் தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்குவார்கள் என்றார்.

தமிழ் மக்கள் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி யை பலப்படுத்த வேண்டிய தேவைப்பாடு உள்ளது. மக்கள் எங்களுக்கு இரட்டிப்பான ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வன்னி வாக்கெடுப்பு: இன்று பரிசீலனை

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து உண்மைகளைச் சமர்ப்பிப்பதற்கான திகதியை வழங்குமாறு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்தன விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த மனுவைப் பரிசீலிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரிதி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பரராஜசிங்கம் உதயராசா மற்றும் இரண்டு வேட்பாளர்களான ஜி. விஜேந்திரரட்ணம் மற்றும் ஏ.கே.ஜி.சுபிஹான் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களான வன்னி மாவட்ட தேர்தல் அதிகாரி உட்பட பலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வன்னி மாவட்டத் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்ததாகக் கூறும் மனுதாரர்கள், மேற்படி வேட்புமனுக்கள் முறையாகச் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், தேர்தல் நடத்தும் அலுவலர் மேற்படி வேட்புமனுவை ஏற்க மறுத்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

முறையான முறையில் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ள நிலையில், மாவட்ட தேர்தல் அதிகாரி வேட்புமனுவை நிராகரித்திருப்பது சட்டத்திற்கு முரணானது என சுட்டிக்காட்டிய மனுதாரர்கள், தேர்தல் நடத்தும் அலுவலரின் முடிவை இரத்துச் செய்து ரிட் கட்டளையை பிறப்பிக்க வேண்டும் என்றார்.

## பன்றிகளுக்கு சுகாதார சான்றிதழ் அவசியம்

இதன் காரணமாக மாவட்டங்களுக்கு இடையே பன்றிகளைக் கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளது.

நோயினால் இறந்த பன்றிகளின் இறைச்சியை உண்பது ஆரோக்கியமற்றது என்பதால் இறைச்சி உற்பத்தியாளர்கள் அவ்வாறான இறைச்சிகளை விற்பனை செய்வதைத் தவிர்க்குமாறும் கோரிக்கை விடுக்கப்படுவதாகவும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

நோய் பரவலைக் கட்டுப்படுத்த தற்போது தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 2 சொகுசு வாகனங்கள் கண்டியில் சிக்கின




இந்த இரண்டு கார்கள் தொடர்பாக அந்த வீட்டில் உள்ள எவரும் சட்டப்பூர்வமாக உரிமை கோர முடியாத காரணத்தால், இரண்டு கார்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கண்டி, மஹிய்யாவ பிரதேசத்தில் போக்குவரத்து கடையொன்றை நடத்திவரும் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன துறைமுக அமைச்சராக இருந்த காலத்தில் துறைமுக அதிகார சபையில் உயர் பதவியை வகித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த இரண்டு கார்களும் சட்டவிரோதமான முறையில் துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பொலிஸார், குறித்த கார்கள் அரசாங்க பரிசோதகரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

# “வெளியேறியவர்களால் வீடு சுத்தமாகும்”

கனகராசா சரவணந்த

மிழரசு கட்சியின் எந்த நிகழ்விலும் பா.அரியேந்திரன் பங்கு கொள்ள கூடாதென கட்சி தீர்மானம் இருக்கின்றபோது, அவர் சிறினேசனுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடுவது தீர்மானத்தை மீறிய செயல். அதேவேளை, தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்து சென்றவர்கள் பதவிகளுக்கு இருப்பவர்களுக்கு எமது கட்சியில் இடமில்லை, வெளியேறியவர்கள் வெளியேறட்டும் வீடு மிக சுத்தமாக வரும் என மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் மேஜரும் வேட்பாளருமான தியாகராசா சரவணபவன் தெரிவித்தார்.



தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் மேஜரின் கல்லடியிலுள்ள காரியாலயத்தில் திங்கட்கிழமை (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வராக என்னைத் தெரிவு செய்வதற்கு என்னை ஒரு வட்டார உறுப்பினராகத் தெரிவு செய்த கல்லடி வாழ் மக்களுக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, மாநகர சபை முதல்வராகத் தெரிவு செய்வதற்குத் துணையாக நின்ற மாநகர சபை வட்டார உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான நாங்கள் மாநகரசபை ஆட்சியைக் கைப்பற்றிக் கடந்த 5 வருட காலமாக நகர்வாள் மக்களுக்கு வினைத்திறன் ஆனதுமான மிகத் திறமையான ஆளுமையைச் செய்து 500க்கும் மேற்பட்ட வீதிகள் புனரமைக்கப்பட்டு தேவையான அளவு வடிகான்கள் புனரமைக்கப்பட்டு தெற்காசியாவிலேயே முதலாவதும் இலங்கையிலே முதலாவது சிறுவர் சிநேகி அபிவிருத்தி செயல்பாடு மாவட்டத்திலே நான் அறிமுகப்படுத்தி இருந்தேன். அதன் மூலமாக எனது செயல்பாடுகள் உலகளவு ரீதியிலே விரிவுபடுத்தப்பட்டிருந்தது.

அதேபோல, எமது ஆட்சிக் காலத்தில் பல அபிவிருத்தி சேவைகளை வழங்கி இருந்தோம் குறிப்பாக அரசாங்க அரச நிதியை மட்டும் நம்பி இருக்காமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதிகளைக் கொண்டு பல செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொரோனா தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்ததோடு, அமைக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்ட சடலம் எரிக்கும் நிலையத்தை புதுப்பித்துத் திறந்தோம் இதன் மூலம் மக்களுக்கு இலகுவாக தமது மரண செயற்பாடுகளைச் செய்யக் கூடியதாக இருந்தது.

அவ்வாறே அடைக்கப்பட்டிருந்த வடிகான்களை அனைத்தையும் முன்னாள் ஆளுநரின்; உதவியோடு சுத்தம் செய்து துப்புரவு செய்து இருந்தோம். இவ்வாறு இந்த ஐந்து வருட காலத்தில் மட்டக்களப்பு மாநகர சபை தமது சேவையைச் சிறப்பாக செய்திருந்தது. இப்படி எனக்கு மட்டக்களப்பு மாநகரத்தில் கிடைத்த அதிகாரம் மட்டக்களப்பு மாவட்டம் முழுதாக கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் இந்த பாராளுமன்ற தேர்தலிலே போட்டியிடுகின்றேன்.

இந்தத் தேர்தலிலே இளம் தலைமுறையினருக்கு முன்னுரிமைப்படுத்திக் களமிறக்கியுள்ளோம். கட்சியை விட்டு வெளியேறிப் போனவர்கள் தேர்தல்களில் போட்டியிட்டுத் தொற்றுப் போனவர்கள் திரும்பத்திரும்ப ஒரே நபர்களுக்கு ஆசனம் வழங்கமுடியாது பதவிகளுக்கு இருப்பவர்களுக்கு எமது கட்சியில் இடமில்லை வெளியேறியவர்கள் வெளியேறட்டும் வீடு மிகச் சுத்தமாக வரும்.

தமிழரசுக் கட்சி கட்டுக்கோப்பை இழந்து செயற்பட முடியாது அவர் கட்சி கட்டுக்கோப்பிலிருந்து செயற்பட்ட காரணத்தினால் அவருக்கு எதிராக ஒழுக்க காற்று நடவடிக்கை மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டு கட்சியினால் அரியேந்திரனுக்கு விசாரணை கோரப்பட்டுள்ள நிலையில் சிறிநேசனுக்கு ஆதரவு தெரிவித்து பிரச்சாரத்தில் ஈடபட்டுவது பிழையான செயற்பாடு இது தொடர்பாக மத்தியக்குழு கூட்டத்தில் ஆராயப்படும்.

அரசாங்கத்தால் தமிழ்த் தேசியத்துக்கு எதிராக அமுல்படுத்தப்படுகின்ற எந்த செயற்பாட்டிற்கும் ஆதரவு வழங்கமாட்டோம் அதேவேளை நாட்டின் நன்மைக்காக அமுல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம் என்றார்.



# தமிழ்மிரரின் பாறுக் ஷிஹானுக்கு விருது

இலங்கையில் கலை, இலக்கியம், ஊடகத்துறை, சமூகப்பணி என்பவற்றில் சாதனை படைத்த பல்துறை ஆளுமைகளைக் கௌரவிக்கும் Sky Tamil ஊடக அமைப்பின் விருதுகள் வழங்கி கௌரவிக்கும் விழா, தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட அரங்கில் சனிக்கிழமை(19) ஸ்கை தமிழ், துணிந்தெழு பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெ.எம்.பாஷித் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

தேசிய, சர்வதேச விருது விழாக்களுக்கு நிகராக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாபெரும் விருது விழாவில், கடந்த 18 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் செயற்பட்டு வருபவரும், தமிழ்மிரர் இணையத்தள, தமிழ்மிரர் மின்னிதழ் (E- Paper) நிருபருமான பாறுக் ஷிஹான், புலனாய்வு செய்தி அறிக்கையிடலுக்கான சிறந்த புலனாய்வு செய்தியாளர் (investigation journalist) விருதைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த வருடம் கட்டாரில் நடைபெற்ற இந்த விழா இரண்டாவது தடவையாக இலங்கையில் இம்முறை நடைபெற்றதுடன், இந்த விருது விழாவில் பல்வேறு துறை சார்ந்த ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

# வீட்டை விட்டுச் சென்ற மாணவி சடலமாக மீட்பு

தனியார் வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்ற, ஒரே பாடசாலையில் படிக்கும் 17 வயதுடைய இரு மாணவிகளில் ஒருவரின் சடலம், மஹியங்கனை-லொக்கலோ ஓயாவில் இருந்து திங்கட்கிழமை (21) அன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றைய மாணவி ஞாயிற்றுக்கிழமை(20) இரவு வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார்.

அவரை ஏற்றிய மோட்டார் சைக்கிள் சாரதி பொலிஸ் வீதித்தடை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார். தற்போது அந்த மாணவி ரிதிமாலியத்த பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பதுளை நகரில் உள்ள தனியார் வகுப்பிற்குச் செல்வதாகக் கூறிவிட்டு, ஞாயிற்றுக்கிழமை (20) காலையிலேயே வீட்டில் இருந்து சென்ற இவர்கள், வீடு திரும்பாததால் பெற்றோர் பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.


இச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி தயாரிப்பு; ஒருவர் கைது

சூரியவெவ-வெவேகம பகுதியில் துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வந்த நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை (20) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சூரியவெவ பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவராவார். உள்நாட்டில் உற்பத்தி



செய்யப்பட்ட T ரக துப்பாக்கி, அதற்கான பயன்படுத்தப்படும் பாகங்கள் மற்றும் ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தங்க நகை திருட்டு; கணவன், மனைவி கைது

ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளை சம்பவம் தொடர்பில் கணவன்,மனைவி இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ.ரஹீம் தெரிவித்துள்ளார்.

கல்லடி திருச்செந்தூரில் அமைந்துள்ள வீடொன்றின் உரிமையாளர் வீட்டைப் பூட்டிவிட்டு பிறந்தநாள் விழா ஒன்றுக்குச் சென்ற நிலையில், தனது கணக்கிலிருந்து சுமார் 13,000 ரூபாய்க்கு பொருட்கள் கொள்வனவு செய்துள்ளதாகக் குறுஞ்செய்தியொன்று வந்ததையடுத்து, உடனடியாக வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டிலிருந்த அலுமாரியை உடைத்து அதிலிருந்த தங்க நகைகள், ஏ.ரி.எம். அட்டை என்பன திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில், மேற்கொண்ட விசாரணையின் போது, வீட்டின் மேல் பகுதியில் வாடகைக்குக் குடியிருந்த



தம்பதியினர் வீட்டுக்குள் நுழைந்து வீட்டிலிருந்த தங்கத்தைத் திருடி மட்டக்களப்பு நகரிலுள்ள நகைக்கடை ஒன்றில் சுமார் 260,000 ரூபாய்க்கு விற்பனை செய்து வீட்டிலிருந்த ஏ.ரி.எம். அட்டையையும் திருடி பூட் சிட்டி ஒன்றில் சுமார் 13,000 ரூபாய்க்கு பொருட்களைக் கொள்வனவு செய்துன்னமை தெரியவந்துள்ளது.

மேற்படி, பூட் சிட்டியின் சி.சி.ரி.வி. கெமராவை பரிசோதித்த போது, சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ஒரு தங்க மாலை மற்றும் ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபாய் பணம், ஏ.ரி.எம். அட்டை என்பன மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போதையில் சென்ற இருவர் வாவிக்கு பலி

கஹட்டகஸ்திகிலிய, இஹல-கங்ஹிடிகம வாவியில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (20) இடம் பெற்றுள்ளது.

பொல்கஹவெல மற்றும் பூஜாபிட்டிய பகுதிகளைச் சேர்ந்த 24 மற்றும் 34 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் மேலும் இருவருடன் மது அருந்திவிட்டு போதையில் நீராடச் சென்ற நிலையில் நீரில் மூழ்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹெரோயினுடன் 7 பேர் கைது

மொஹொமட் ஆஸிக்

வத்துகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெகல்தொருவ பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து சுமார் 200 கிராம் ஹெரோயினுடன் ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதானவரிடம் மேற்கொண்ட விசாரணையில், பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவரிடமிருந்து 101 கிராம் மற்றும் 200 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், மேலும் ஐந்து சந்தேக நபர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடம் இருந்து 200 கிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இரத்மலானை, திகன, கட்டுகஸ்தோட்டை, அலதெனிய உட்பட பல பிரதேசங்களைச் சேர்ந்த 25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

மேலும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இணைந்த கரங்களால் உலருணவு

வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் திகிலிவெட்டை மக்களுக்கு ‘இணைந்த கரங்கள் உறவுகளால்’ உலர் உணவு பொதிகள் சனிக்கிழமை (19) வழங்கி வைக்கப்பட்டன.

குடி நீர், மின்சார வசதி மற்றும் தொழில் வாய்ப்பு இன்றி, யானைகளின் அச்சுறுத்தலினால் இந்த கிராமத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கே, இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான பகீரதன், காந்தன், கஜன், சனா, நேமிநாதன்,.வசந், ஜெயக்காந்தன் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# தேங்காய் சம்பலுடன் சாப்பிடுவதும் கேள்விக்குறியாகிறது

இன்றைய சந்தையை அவதானிக்கும் போது, பொருட்களின் விலைகள் திடீரென அதிகரிகத் தொடங்கி விட்டன. இதனால், சாதாரண மக்கள் மீண்டும் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக நாட்டு அரிசி, வெள்ளை மற்றும் சிவப்பு அரிசியின் விலை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவதால், சந்தையில் நாட்டு அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏனைய அரிசி வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

கடந்த சில வருட அரிசி விலையை வைத்துப் பார்க்கும் போது, கீரி சம்பா அரிசி விலை மிக அதிகமாக இருந்தது. இதனால், பல விவசாயிகள், நாடு மற்றும் சம்பா நெல்லை கை விட்டு, கீரி சம்பாவை பயிரிட்டனர்.

இதுபோன்ற சூழ்நிலையில், கிராம அளவில் வேளாண் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர்களின் மேற்பார்வை இருக்க வேண்டும். இத்தகைய வழிகாட்டுதல் இல்லாமல் கீரி சம்பா விவசாயம் செய்யப்பட்டதால், கீரி அரிசியின் விலை அசாதாரணமாகக் குறைந்ததோடு, நாடு மற்றும் சம்பா அரிசியின் விலையும் உயர்ந்தது. கிலோ கிராம் 380 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் கீரி சம்பா, 240 ரூபாவாகவும், 160-170 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசி, தற்போது 220 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

சில மில் உரிமையாளர்கள், மொத்த வியாபாரிகளுக்கு அரிசி கொண்டு வந்து இறக்கும் போது, கூடுதல் போக்குவரத்து கட்டணம் வசூலிக்கின்றனர். அப்போது மொத்த வியாபாரிகள் ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசியை 220 ரூபாய் அல்லது அதற்கு மேல் விற்கிறார்கள். இவ்வாறான நிலையில் சில்லறை விற்பனைக் கடையில் அரிசியைக் கட்டுப்பாட்டு விலைக்கு எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது எமக்குப் பிரச்சினையாக உள்ளது.

இந்த நெருக்கடிக்குச் சிறந்த தீர்வாக தற்போது சில்லறை விற்பனைக் கடைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு விலையை அரிசி ஆலைகளுக்கும் அறிமுகப்படுத்த வேண்டும். அரிசி ஆலை உரிமையாளர்கள் அவர்கள் விரும்பும் விலைக்கு அரிசியை விற்க அனுமதித்து, சில்லறை விற்பனைக் கடைகளில் மட்டும் கட்டுப்பாட்டு விலையை அறிமுகப்படுத்துவதன் மூலம், சில்லறை விற்பனையாளர்கள் நாடு, சம்பா, போன்ற அரிசி வகைகளை விற்பனை செய்வதிலிருந்து விலகுவார்கள்.

அதேபோன்றதொரு நிலைதான் இப்போதும் ஏற்பட்டுள்ளது. அப்போது சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு, பொதுவாகக் கிடைக்கும் கீரி சம்பா அரிசியை வாங்க நுகர்வோர் ஆசைப்படுவதால், கீரி அரிசியின் விலை மீண்டும் உயரும். அப்போது பல இலட்சம் மெட்ரிக் தொன் கீரி அரிசியைச் சேமித்து வைத்திருக்கும் மில் உரிமையாளர்களின் வருமானம் அதிகரிக்கும்.

இப்படித்தான் அரசாங்கத்தின் கைகளில் தலையை வைத்துள்ள பெரிய வியாபாரிகள் அரசாங்கத்தை வசை பாடுகின்றனர். அரசாங்கத்தைப் பாராட்டி அரசாங்கத்தின் நம்பிக்கையைப் பெற்று வாடிக்கையாளர்களைச் சுரண்டும் வஞ்சக மில் உரிமையாளர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

தேங்காய் விலையிலும் இதே நிலைதான். இன்று நகரச் சந்தையில் தேங்காய் ஒன்று 150-160 ரூபாய் வரை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதைக் காணமுடிகிறது. பொதுவாக செப்டெம்பர் முதல் டிசெம்பர் வரை தேங்காய் விளைச்சல் குறைவு. மேலும், சமீபத்தில் பெய்த மழையும் தேங்காய் விலை உயர்வுக்கு மற்றொரு காரணியாக உள்ளது. எனினும், அதிக இலாபம் ஈட்டுவதற்காகத் தேங்காய் விலையை உயர்த்துவது பொறுப்பற்ற செயலாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




ஒரு மாதத்திற்குள்

# முழுமையான மாற்றம் சாத்தியமா?

**மொஹமட் பாதுஷா**

பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில்தான் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றார். ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வாக்களித்தவர்களை விட, ஏனைய கட்சிகளுக்கு புள்ளடியிட்ட வாக்காளர்களின் கூட்டுத்தொகை அதிகமாகும். ஆனால், அனுரவுக்கு எதிராக வாக்களித்த மக்களிடையேயும் அவர் பற்றிய அபரிமிதமான எதிர்பார்ப்புகள் உள்ளன என்பது முக்கியமானது.

ஒரு கிராமத்தில், சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானது இலங்கையின் மேட்டுக்குடி சார்ந்த அல்லது ஒரு குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட நிலையிலிருந்த அரசியலில் முக்கியமான மாற்றம் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

அதுவும் கடந்த பல தசாப்தங்களாக நாட்டில் ஊழல், மோசடி, அநியாயமிழைப்பு, மனித உரிமை மீறல்கள், ஆளுகை முறைகேடுகள் பற்றி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மிகத் தெளிவாக விமர்சித்து வந்தவர் அனுரகுமார திசாநாயக்க. அவரது உரைகளும் தலைமைத்துவமுமே ஜே.வி.பி. பற்றிய கடந்தகால பார்வையை மாற்றியமைக்க முக்கிய காரணமாக அமைந்தது எனலாம்.

எனவே, இப்பேர்ப்பட்ட ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானதும் எல்லா மக்களிடையேயும் ‘அவர் இதனைச் செய்வார், இவர்களைக் கைது செய்வார், பொருட்களின் விலைகளைக் குறைப்பார், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவார், நல்லாட்சியை நிறுவுவார், இனவாதத்தைத் துடைத்தெறிவார்’ எனப் பலவிதமான எதிர்பார்ப்புக்கள் மக்களுக்கு ஏற்படுவது இயல்பானதே.

அந்த வகையில், தேர்தல் பிரசாரத்தின் போது, வாக்குறுதியளித்த அந்த மாற்றத்தை ஏன் இன்னும் ஜனாதிபதி ஏற்படுத்தவில்லை? என்று எதிரணிகள் இப்போது கேள்வி கேட்கின்றன. ஏன் கள்வர்களைக் கைது செய்யவில்லை, கொள்ளையடித்த பணத்தைப் பறிமுதல் செய்யவில்லை என்று அப்படிப்பட்டவர்களும் கேட்கின்றார்கள். மக்களுக்கு ஏன் மேலும் நிவாரணங்களை அறிவிக்கவில்லை என்று மக்கள் அங்கலாய்ப்பதையும் காணமுடியாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் சஜித்தையும், ரணிலையும் ஆதரித்தனர். தமிழ் கட்சிகள் பல கூறுகளாகப் பிரிந்தன. ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரும் நிறுத்தப்பட்டார். இப்போது, அதிகாரத்திற்கு வந்த உடனேயே அனுர அரசு இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றும் முஸ்லிம்களை அரவணைக்க வேண்டும் என்றும் சிறுபான்மை அரசியல்வாதிகள் கோருவதைக் காண முடிகின்றது.

சிறுபான்மைக் கட்சிகள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக அனுரகுமாரவை ஆதரிக்கவில்லை என்றாலும், கணிசமான முஸ்லிம்களும் தமிழர்களும் அனுரவுக்கு வாக்களித்திருந்தார்கள் என்பதை மறுக்க முடியாது. எனவே, எல்லோருக்குமான ஜனாதிபதி என்ற வகையில், சிறுபான்மை மக்களின் நலன்களையும் உறுதி செய்ய வேண்டிய கடப்பாடு அவருக்கு உள்ளது.

ஆனால், எல்லோரும் சேர்ந்து நாட்டின் அன்றாட நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு முன்வராமல், அதற்கு ஒத்துழைப்பு வழங்காமல்.... வெளியில் நின்றுகொண்டு குறுகிய காலத்திற்குள் பெரிய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

எது எவ்வாறிருப்பினும், ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்குப் பொறுப்புள்ளது. எதிரணி அரசியல்வாதிகளும் இந்த நாட்டை அதளபாதாளத்திற்கு கொண்டு சென்றவர்களும் சொல்கின்ற கதைகளை, விமர்சனங்களைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால், மக்களின் எதிர்பார்ப்பை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆண்டாண்டு காலமாக ஆட்சி செய்தவர்கள், பெரிய அரசியல் தலைவர்களை எதிர்த்துக் கொண்டு, அனுரகுமார திசாநாயக்கவை வெற்றி பெறச் செய்வதற்கு மக்கள் எடுத்த முடிவு என்பது சாதாரணமானதல்ல. எனவே அதற்கான பிரதிபலனை அரசாங்கம் வழங்கியாக வேண்டியுள்ளது.

ஒரே இரவிலோ அல்லது ஒரு மாதத்திலோ எல்லா விடயப் பரப்புக்களிலும் மக்கள் நினைக்கின்ற மாற்றத்தை அனுரவினால் கொண்டு வந்து விட முடியாது என்ற யதார்த்தம் இங்கு கவனிப்பிற்குரியது.

‘சொல்வது இலகுவானது, ஆனால், அதனைச் செயலில் காட்டுவதே சிரமமானது என்று கூறுவார்கள். வெளியிலிருந்து கொண்டு என்ன வேண்டுமென்றாலும் சொல்லலாம். ஆனால், அந்தப் பதவியில், அந்தக் கதிரையில் உட்கார்ந்தால்தான் அங்குள்ள உண்மையான சாதக, பாதக நிலைகள் தெரியும். இதற்கு ஜனாதிபதியோ அமைச்சரவையோ விதிவிலக்காக இருக்க முடியாது.

நாட்டின் ‘சிஸ்டம்’ எல்லா மட்டங்களிலும் பழுதடைந்துள்ளது. கள்வர்கள் அரசியலில் மட்டுமன்றி, அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலும் உலவுகின்றனர். எனவே, நல்ல மாற்றம் ஒன்று வருகின்ற போது, அவ்வாறானவர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள். ஆனால், நேர்மையாக பணியாற்றுவதற்கான வாய்ப்புக்காகக் காத்திருந்த அதிகாரிகள், அரசியல்வாதிகளால் இந்தளவுக்கேனும் நாட்டை இயக்க முடிந்துள்ளது என்றுதான் கூறலாம்.

இதற்கிடையில், பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் விதிமுறைகளின் படி, சில சலுகைகளை, மானியங்களை அரசாங்கம் அறிவிக்க முடியாது. நூறு ரூபாவினால் பெற்றோல் விலையைக் குறைக்க நினைத்தாலும், விலை சூத்திரத்திற்கு அப்பால் செல்ல தேர்தல்கள் ஆணைக்குழு விடாது.

உண்மையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று ஒரு மாதத்தின் பின்னர் பொதுத் தேர்தலை அறிவித்திருந்தால், அதற்கிடையில் சில மானியங்களை அறிவித்து மக்களது எதிர்பார்ப்பைக் கொஞ்சம் நிவர்த்தி செய்திருக்கலாம். ஆனால், உடனடியாக அடுத்த தேர்தல் அறிவிக்கப்பட்டதால் சில விடயங்கள் சாத்தியமற்றுப் போயுள்ளன.

அனுரகுமாரவின் கையில் அலாவுதீனின் அற்புத விளக்கும் இல்லை, அவர் ஒரு மாயாஜாலக் காரனும் இல்லை. ஜனாதிபதியாகப் பதவியேற்கும் போதே, அவருக்கு இது தெட்டத் தெளிவாகப் புரிந்திருந்தது. தனது கன்னி உரையிலேயே தான் ஒரு சாதாரண மனிதனே என்றும் மாய வித்தை காட்டுபவனல்ல என்றும் கூறியிருந்தமை இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

இத்தனைக்கும் நடுவில் மக்களுக்கு சில சலுகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. சில வழக்குகள், பல கோப்புகள் மீளத் திறக்கப்பட்டுள்ளன. சட்டப்படி செய்யக் கூடிய காரியங்களைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமை வெளிப்படையானது. எனவே, அனுர அரசிற்கு; செய்து காட்டுவதற்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் வழங்க வேண்டும்.

ஜே.வி.பியின் கடந்தகால சரித்திரங்களும், அது எவ்வாறு தன்னை முன்னிறுத்தியது என்பதும், அனுரகுமார திசாநாயக்க தலைவரான பிறகுதான் சிறுபான்மை மக்களும் அதனை நம்பத் தொடங்கினார்கள் என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

இருப்பினும், அடிப்படை ஜே.வி. பி. சிந்தனையாளர்கள் சிலர் இன்னும் உள்ளுக்குள் இருந்து கொண்டு அரசின் மீதான நல்லபிப்பிராயத்தை குழப்பிக் கொண்டிருக்கின்றார்களா என்ற நியாயமான சந்தேகத்தை ரில்வின் சில்வாவின் கருத்து ஏற்படுத்தியுள்ளது. அப்படியென்றால், ஜனாதிபதிக்கு அதுவும் ஒரு சவாலே.

ஜனாதிபதித் தேர்தல் களமும். பொதுத் தேர்தலும் வேறு விதமானவை. ஜனாதிபதித் தேர்தலில் அனுரவா, சஜித்தா, ரணிலா என்றுதான் சிந்தித்தார்கள். ஆனால், பொதுத் தேர்தலில் நமது சமூகத்திற்கு, ஊருக்கு ஒரு நல்ல எம்.பி. வேண்டுமென்று மக்கள் சிந்திப்பார்களே தவிர அனுர ஜனாதிபதியாகிவிட்டார் என்பதற்கு அவரது கட்சியின் வேட்பாளர்களுக்கே வாக்களிப்பார்கள் என்று கருத முடியாது.

எனவே, அரசாங்கம் மக்களுக்கு எதனையாவது செய்து காண்பிக்க வேண்டிய தேவை உள்ளது. தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக, அல்லது மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதாக ஒரு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய இக்கட்டான நிலையில் அனுர அரசாங்கம் இருக்கின்றது.

அனுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்று ஜனாதிபதி ஆவதும், அதனால் ஹரிணி அமரசூரிய பிரதமர் ஆவதும், விஜித்த ஹேரத் அமைச்சராவதும் வேறு விடயம். ஆனால், இந்த வெற்றி அலை ஓய்வதற்கிடையில் என்.பி.பியின் வேட்பாளர்களில் 113 பேரை வெல்ல வைத்து ஆட்சியமைப்பது என்பது அதைவிடச் சிரமமானது.

இதனை அரசாங்கம் நன்கறியும். மக்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றினால் மட்டுமே பொதுத் தேர்தலில் வெற்றி பெறலாம் என்பதையும் ஜனாதிபதி அனுர ஆழமாக அறிவார். ஆனால், எல்லாவற்றையும் உடனேயே குறுகிய காலத்திற்குள் செய்துவிட முடியாது. தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் சட்ட ரீதியான தடைகளும் உள்ளன

எது எவ்வாறிருப்பினும், அனுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை பல மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. மக்களது எதிர்பார்ப்புக்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை என்றாலும், பல ஊழல்வாதிகளுக்குப் பயம் ஏற்பட்டுள்ளது. கணிசமான அரசியல்வாதிகள் தேர்தலில் இருந்து ஒதுங்கியுள்ளனர். சிலர் நாட்டிலேயே இல்லை.

அதிகாரிகள் தொடக்கம் சாதாரண அரச ஊழியர்கள் வரை பலருக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது. நீதி நிலைநாட்டல், நீதமான ஆட்சி பற்றிய நம்பிக்கை துளிர்விட்டுள்ளது. இதற்கிடையில் நடைமுறைச் சாத்தியமான சில சலுகைகளும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

அனுரகுமார அரசாங்கம் சொன்னதை எல்லாம் செய்து காட்டும் என்று இந்தப் பத்தி கூற வரவில்லை. மாறாக, இவர்கள் உண்மையில் செயல் வீரர்களா? சொல் வீரர்களா? என்ற முடிவுக்கு வர மக்கள் இன்னும் கொஞ்சக் காலம் பொறுத்திருக்க வேண்டும் என்பதையே அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.



## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் தெளிவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றன. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கப்பூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மழை நீரால் அவதியுறும் மாணவர்கள்



அவிசாவளை- எட்டியாந்தோட்டை பாரதி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்து மழை நீரால் அவதியுற்று வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

முதல் நாள் இரவு மழை என்றால், மறுநாள் அதிகாலையிலேயே மாணவர்களும், ஆசிரியர்களும் பாடசாலைக்குச் சென்று வகுப்பறைக்குள் இருக்கும் மழை நீரை வெளியேற்றி பின்னர் வகுப்பறைக்குச் செல்கின்றனர்.

இவ்வாறு பல்வேறான இன்னல்கள், துயரங்கள், தடைகள் வந்தாலும், குறித்த பாடசாலை இன்றும் இயங்கி வருவதாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த பாடசாலை மாணவர்களின் நலன் கருதி இப் பாடசாலையை நவீன முறையில் கட்டிக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உடன் முன் வர வேண்டும் என பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், அதிபர் உட்பட சமூக நலன் விரும்பிகள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செ.தி.பெருமாள்

# தமிழ்த் திரைப்படங்களில் கல்வி



சயனிகா ஸ்ரீ,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக”

என்றார் வள்ளுவர் பெருமான். கல்வி ஒருவனுடைய அறிவை விருத்தி செய்வதுடன், வையத்தில் வாழ்வாங்கு வாழ வைக்கின்றது. கல்வி வேலை வாய்ப்பையும், பட்டத்தையும் வழங்குவதையே பலரும் பார்க்கின்றார்கள். உண்மையிலே மனிதனைப் பண்படுத்தி மனிதநேயம் மிக்கவனாக உருவாக்குவது கல்வி. இன்று கற்றோர் சிலரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது இந்தக் கூற்றுச் சரிதானா என்ற எண்ணமும் ஏற்படவே செய்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை, கி.வி. வி.கன்னகர இலவசக் கல்வியை ஏற்படுத்திய பின்னர், கல்வி வாய்ப்பு சலருக்கும் கிட்டியது. அரச பாடசாலைகள் பரவலாக அமைக்கப்பட்டு அவற்றின் தரமும் பேணப்பட்டு வருவதால் எமது நாட்டில் அரச பாடசாலைகளில் படிக்கப் பலரும் விரும்புகிறார்கள். சில தொலைதூர கிராமங்களிலும் பெருந்தோட்டப் பகுதியிலுமே சில பற்றாக்குறைகள் இருக்கின்ற போதிலும், அவற்றைப் படிப்படியாக முன்னேற்றி வருவதும் கண்கூடு. எமது நாட்டில் பல்கலைக்கழகக் கல்விகூட இலவசமாக வழங்கப்படுகின்றது. இந்த நிலையில்,

இங்கே தனியார் பாட சாலைகளின் உருவாக்கம் மிகக் குறைவாகவே உள்ளது. உலகமயமாதலுடன் இணைந்ததாக நகரப்புறங்களில் சர்வதேச பாடசாலைகள் இயங்கிவருகின்ற போதிலும் அவை அரச பாடசாலைகளுக்கு நிகராக இல்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை, தனியார் பாடசாலைகள் அதிகம் உள்ளன. அரச பாடசாலைகள் இருப்பினும், அவற்றின் தரம் பல பாடசாலைகளில் கேள்விக்குறியாகவே உள்ளது. இதனால் அங்கு வசதிபடைத்தவர்கள் மாத்திரமன்றி, நடுத்தரவர்க்கத்தினரும் தமது பிள்ளைகள் படித்து முன்னேறவேண்டும் என்பதற்காகத் தனியார் பாடசாலைகளை நாடுகின்றனர். பல தனியார் பாடசாலைகள் பணம் பண்ணுவதையே முதல் நோக்காகக் கொண்டுள்ளமையால் சாதாரண மக்கள் இங்கு தமது பிள்ளைகளைப் படிக்கவைத்து, ஆகின்றனர். தமிழகத்தின் இன்றைய கல்வி நிறுவனங்கள் தொடர்பான அவலநிலை சினிமாவிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. கல்வி தொடர்பான சில நல்ல திரைப்படங்கள் அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ளன. அந்த வகையில், சில குறிப்பிடக்கூடிய படங்களாகப் பள்ளிக்கூடம், அம்மா கணக்கு, அப்பா, ராட்சசி உள்ளிட்ட சில திரைப்படங்களைக் குறிப்பிடலாம். இப்போதெல்லாம் மசாலா திரைப்படங்களில் கூட விளிம்புநிலை மக்களின் பொதுப் பிரச்சினைகள் மேலோட்டமாகவேனும் அணுகப்படுவது தவிர்க்கமுடியாதுள்ளது.

தங்கப்பச்சானின் பள்ளிக்கூடம் திரைப் படத்தில் கிராமிய பள்ளிக்கூடங்களின் வளப்பற்றாக்குறை, அந்த குறைபாடுகளை நிவர்த்திக்கப் போராடும் கிராமிய மக்களையும் தரிசனமாக்குகின்றார். கிராமியச் சூழலில் நிலவும் சாதிப்பிரச்சினைகளும் அணுகப்படுவது இன்னொரு சிறப்பு அம்சம். நரேன், சினேகா, தங்கப்பச்சான் ஆகியோர் சிறப்பாக நடித்துள்ள இந்தத் திரைப்படம், கிராமியப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற எண்ணக் கருவை விதைத்துள்ளது. தங்கப்பச்சானின் ஆரம்பகாலப் படங்கள் சிறப்பானவை. மக்கள் மனதைச் சென்றடைந்து சிந்தனைகளைத் தூண்டுபவை. கதாபாத்திரங்களும் மிகையில்லாமல் இயல்பானவையாக உலாவருகின்றன.


அடுத்து அம்மா கணக்கு திரைப்படம், அமலாபால், ரேவதி முதலானோர் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளனர். இயக்குநர் சமுத்திரக்கனி ஆசிரியராகத் தோன்றி சிறப்பாக நடித்துள்ளார். ஏழைகளும் படித்து முன்னேற வேண்டும் என்ற மையக் கருவை மனதில் பதியவைக்கும் திரைப்படம். வேலைக்காரியின் மகள் வேலைக்காரியானால் போதும் என்ற மனப்போக்கில் படிப்பில் அக்கறை செலுத்தாதிருக்கும் மகளை வறுமையோடு போராடும் தாய் படிக்கவைக்க வேண்டும் எனப் பாடுபடுகிறாள். இவளது இந்தநோக்கத்திற்கு இவள் வேலைசெய்யும் வீட்டு எஜமானியும் உற்சாகமூட்டுவதுடன் உதவவும் செய்கிறாள். கழப்பை உதாசீனப்படுத்தி வந்த மகளும் படிக்க ஆரம்பிக்கின்றாள். மகளைப் படிக்கவைப்பதற்கே தாயும் அதே வகுப்பில் சேர்ந்துபடிப்பது சற்று யதார்த்தம் இல்லாதிருப்பினும் மகளின் மனமாற்றத்திற்கு உதவுகின்றது. கவர்ச்சி நடிகை அமலாபால் வேலைக்காரி பாத்திரத்தில் வாழ்ந்து காட்டி வியப்பில் ஆழ்த்தியுள்ளார். பொருத்தமான வசனங்களும் படத்திற்கு மெருகேற்றுகின்றன.

அடுத்தது ஜோதிகா ஓர் அரச பாடசாலையின் அதிபராக நடித்து அசத்தியுள்ள படம் ராட்சசி. பின்தங்கிக் கவனிப்பாரற்று இருக்கும் கிராமிய அரச பாடசாலையில் அதிபராகப் பணியாற்றும் ஜோதிகா பாடசாலையை முன்னேற்றுவதற்கு எடுக்கும் இறுக்கமான நடவடிக்கைகளால் ஆசிரியர்களால் ராட்சசி என்று பட்டம் சூட்டப்படுகின்றாள். ஒருநாள் ஓர் ஆட்டோவில் ஜோதிகா ஏறிச்செல்லும் போது அவரை அப்பாடசாலையின் ஆசிரியை என்று நினைக்கும் சாரதி, “ஏங்க, உங்க பாடசாலைக்கு ஒரு புது தலைமை ஆசிரியை வந்திருக்கிறாராம். அவ சரியான ராட்சசியாம்” என்று கேட்கும்போது, புன்னகைக்கும் ஜோதிகா










தனது வீட்டில் இறங்கிச் செல்லும்போது நான் தான் அந்த ராட்சசி என்று கூறும் இடம் சிறப்பாக உள்ளது. முதலில் மாணவர்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தை உணரவைத்து அவர்களின் மனங்களை வெல்கின்றார்.

அடுத்துக் கற்பித்தலில் அக்கறையில்லாது பாடசாலையில் வெட்டிப் பொழுதுபோக்கும் ஆசிரியர்களைக் கற்பித்தல் பணியைச்செய்ய வைக்கின்றார். இதனால் ஏற்படும் அவர்களின் எதிர்ப்பைச் சமாளித்து அவர்களைப் புரிய வைக்கின்றார். அதே ஊரிலிருக்கும் முன்னணி தனியார் பாடசாலைக்கு நிகராக தனது அரச பாடசாலையை உயரவைக்கின்றார். கல்வி, விளையாட்டு, கலைகள் என மாணவர்களைச் சாதிக்க வைக்கின்றார். ராட்சசியாக பார்த்தவர்கள் இப்போது அவளை ஒரு தேவதையாகப் போற்றுகிறார்கள். தமிழகத்திலும் அரச பாடசாலைகளை தனியார் பாடசாலைகளும் நிகராக உயர்த்தமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறார்.

அடுத்து, அப்பா, திரைப்படம். இங்கு கல்வி பற்றிய பெற்றோரின் புரிதலற்ற நிலையை மாற்றவும், பெற்றோர் பிள்ளைகள் மீது கல்வியைத் திணிக்கக்கூடாது என்பது பற்றியும் அலசப்படுகின்றது. எல்லாப் பெற்றோரும் தமது பிள்ளைகள் முதல் மாணவனாக வரவேண்டும் என்று விரும்புகின்றார்கள். முதல் மாணவனாக எல்லோராலும் வரமுடியாது முன்னணி மாணவர்களாக, சமூகத்திற்கு ஏற்றவராக வந்தால் போதும் என்பதைத் தெளிவுபடுத்துவதில் இத்திரைப்படம் வெற்றிபெறுகின்றது. மகனைப் புரிந்து கொண்ட அப்பாவாக சமுத்திரக்கனியும், கல்வியை மகன் மீது திணிக்கும் அப்பாவாகத் தம்பி இராமையாவும் நடித்துள்ளனர். சமுத்திரக்கனி இயல்பாக நடித்துள்ளார். வசனங்களைப் பேசுவது அதிகம் எனினும் அவை பயனுள்ள வசனங்களாக இருப்பதால் ஏற்றுக்கொள்ளமுடிகின்றது.

கல்வி தொடர்பான விடயங்களில் சமுத்திரக்கனியின் படங்கள் சிறப்பாக இருக்கின்றன. தற்போது சூரியாவின் சினிமா தயாரிப்பு நிறுவனமும் மாணவர் சமூகத்தில் அக்கறை கொண்டு படங்களைத் தயாரித்து வருகின்றது. விஜய், ரஜினி போன்றவர்கள் நடிக்கும் பிரமாண்ட தயாரிப்புகளிலும் கல்வி பற்றிப்பேசப்படுகின்றது. எனினும், தீர்க்கும் முறைதான் தனிமனித சாகசமாக உள்ளது.

எல்லோர்க்கும் கல்வி, ஏழைகளுக்கும் கல்வியில் சமவாய்ப்பு என்ற நிலை உருவாக வேண்டும். எமது நாட்டில் பெருந்தோட்டப்புற மக்களில் கல்வியில் கூடுதல் அக்கறை அவசியம்.

# அந்தரங்கங்களை பணமாக்கும் சமூக ஊடகங்கள்






சொக்கலிங்கம் லோஜினி,
ஊடக கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

கிட்டத்தட்ட இரண்டு, மூன்று தசாப்தங்களுக்கு மனதை பின்னோக்கி செலுத்துங்கள். அப்போதெல்லாம் எப்போதாவது ஒருமுறை தொலைபேசியில் அழைத்தால் மட்டுமே அல்லது நேரில் வந்தால் மட்டுமே உறவுக்காரர்கள், நண்பர்களை பார்த்துக்கொள்வதும், பேசிக்கொள்வதுமாக இருந்தோம். அடுத்தமுறை அவர்களை பார்க்கும்வரை அதுபற்றியே பேசி மகிழ்ந்து கொண்டிருப்போம். ஆனால், அதுவே இப்போது? நினைத்தால் அடுத்த நொடியிலேயே உலகின் எந்த மூலையில் இருப்பவர்களையும் தொடர்புகொண்டு பார்க்கிறோம், பேசுகிறோம். நமது கையிலிருக்கும் செல்போனும், சமூக ஊடகங்களும்தான் அதற்கு காரணம். கடந்த சில வருடங்களில் ட்விட்டர், ஃபேஸ்புக், வாட்ஸ்-ஆப், இன்ஸ்டாகிராம் என அதீத வளர்ச்சியடைந்த சமூக ஊடகங்கள் நமது தொடர்பலையை விரிவுபடுத்தி இருக்கிறது என்றே சொல்லலாம். குறிப்பாக கொரோனா ஊரடங்கு காரணமாக வேலை, கல்வி என அனைத்தும் சமூக ஊடகங்களின் துணையின்றி நடப்பதில்லை என்கிற நிலை இப்போது உருவாகிவிட்டது.

இலட்சக்கணக்கான மக்களை எளிதில் சென்றடையக் கூடிய இத்தகைய சமூக ஊடகங்களைப் பயன்படுத்திக் கற்பித்தலும் தற்போது நடைபெற்று வருகிறது. அதுவும் கெரோனா நோய்த்தொற்று உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், பொதுமக்கள், குறிப்பாக மாணவர்கள் வீடுகளில் இருந்தே கற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். இந்த காலகட்டத்தில் மாணவர்களின் கல்விக்கு கை கொடுப்பதில் மிகப்பெரும் பங்கு வகிக்கிறது இத்தகைய சமூக ஊடகங்கள். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இடையே இவை ஒரு பாலமாக மாறிவிட்டன. புதிய கற்றல் முறைகளையும், கற்றல் அனுபவங்களையும் இத்தகைய மின் கற்றல் முறை இந்த சமூகத்திற்கு வழங்கி விட்டது.

ஆண்டுகள் அதிகரிக்க அதிகரிக்க, சமூக ஊடகங்கள் வருவதற்கு முன்னால் உலகம் எப்படி இருந்தது என்பதே பலருக்கும் மறந்து வருகிறது. அப்போதெல்லாம் வம்பளப்பதே மக்களுக்குச் செலவில்லாத பொழுதுபோக்காக இருந்தது. வாயாடிகள் சும்மா இருக்கமுடியாமல், தங்களுடைய வீதியில்- சமூகத்தில் வேலை செய்யும் இடத்தில், யார், யாருடன் பேசுகிறார்கள். போகிறார்கள் என்பதையெல்லாம் மிகவும் இரகசியமானதைப் பகிர்ந்துகொள்வதைப் போல பேசுவார்கள். அதில் பாதி உண்மையும் பாதி கற்பனையும் கலந்தே இருக்கும். கேட்பவர்களுக்கும் அது தெரியும் என்றாலும் அதை அறிவதிலும் மேற்கொண்டு தங்களுக்குள் அதைக் கற்பனையில் மெருகேற்றுவதிலும் அலாதியான ஈரகசிய கிளர்ச்சி இருந்தது என்பதே உண்மை. தங்களுடைய வாழ்க்கையை இன்னொருவருடைய வாழ்க்கையுடன் ஒப்பிட்டு, தங்களுக்கு இல்லாத குறை அல்லது வராத சோதனை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது என்றால் அதில் ஏதோ தனக்கு வெற்றி ஏற்பட்டுவிட்டதைப் போன்ற சுபாவம் எல்லோருக்குமே இருக்கிறது.

## சமூக ஊடகங்களின் முதலீடு எது?

மனிதர்களின் இந்தப் பலவீனமான மனநிலையைத்தான் சமூக ஊடகங்கள் முதலீடாக வைத்து காட்டுத்தீயென அவர்களுடைய உன்மத்தங்களைக் விசிறி விட்டுக் கொண்டிருக்கின்றன. நமக்கிருப்பதாக நாமே நம்பிக்கொண்டிருக்கும் ஆற்றல்கள், தனிப்பட்ட அழகுகள் ஆகியவற்றை வெளிக்காட்டி நம்மை நாமே விலைபேசிவருகிறோம். லாகூரில் வசிக்கும் குடும்பப் பெண் முதல் டொரான்டோவில் வாழும் இள நங்கை வரை, தன்னைப் பற்றிய காட்சிப் பதிவுகளையும் அந்தரங்கத் தகவல்களையும் எவரும் கேட்காமலேயே வெளியிட்டு மகிழ்ச்சி அடைகின்றனர்.

அவர்கள் சொல்ல அல்லது காட்ட விரும்பும் தகவல்கள் மட்டுமல்ல, மற்றவையும் சேர்ந்தே வெளியாவது குறித்துப் பலர் அறிந்திருக்கவில்லை. ஏனையோர் அதைப் பற்றிக் கவலைப்படுவதும் இல்லை. தங்களுடைய பதிவில் எதை வட்டமிட்டுக் காட்டுகிறார்கள். எதை ரசிக்கிறார்கள். எதற்கு உள்ளர்த்தத்துடன் விமர்சிக்கிறார்கள் என்பதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. மாறாக எத்தனை பேர் பார்த்தார்கள். விரும்பினார்கள் என்ற எண்ணிக்கைக்கே முக்கியத்துவம் தருகின்றனர். அடுத்தவர்களைப் பார்க்கும் அல்லது ரசிக்கும்

மனிதர்களின் உள்மன ஆசையே ஒரு ‘தொழிலாக வடிவெடுத்து வளர்ந்து விட்டது. இப்போது, இதில் யார் அதிகம் பேரை ஈர்ப்பது என்பதில் வரம்பில்லா போட்டியும் அதிகரித்து விட்டது. இதனால் கோடிக்கணக்கானவர்கள் சமூக ஊடகங்களைப் பார்ப்பதில். படிப்பதில் அடிமைகளாகிவிட்டனர். ஏராளமானோர் காலையில் தூக்கம் கலைந்து எழுந்தவுடனேயே பல்லைக்கூடத் துலக்காமல் அல்லது முகத்தைக்கூடக் கழுவாமல் கைப்பேசியை எடுத்து அதில் வந்துள்ள தகவல்களை, படங்களைப் பார்க்கத் தொடங்குகின்றனர்.

சமூக ஊடகங்களில் பதிவுகளைப் பகிர்வது தவறு என்று நான் கூறவில்லை. எமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கான தளமாக சமூக ஊடகங்கள் அமைகின்றன. எனவே, திறமைகளைச் சரியான முறையில் பகிர வேண்டும் என்பதைத் தான் நான் கூறுகின்றேன். அதற்காக அந்தரங்க விடயங்களை எல்லாம் பகிர்ந்து அதை ஏனைய அனைவரும் பார்வையிட்டு நிறைய Likes, commentsயைப் பெற்றுத் தான் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற அவாவே இத்தகையவர்களை தவறான பாதையில் இட்டுச் செல்கின்றன.

சமூக ஊடகங்களைப் பார்ப்பது பழைய வழக்கமாகி விட்டாலும் அதில் விருப்பம், விருப்பமின்மையைத் தெரிவிப்பதில் ஆர்வம் குறைந்துவிட்ட போதிலும், தங்களுடைய நட்பு வட்டத்திலும் உறவு வட்டத்திலும் யார் என்ன பதிவிட்டிருக்கிறார்கள் என்பதை உடனே தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் தலைதூக்கி நிற்கிறது. இன்றைக்கு அழகாக உடுத்தியிருக்கிறார்கள், ஒப்பனை செய்திருக்கிறார்கள், மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று பார்க்கிறார்கள். யாருடைய பதிவு வரவில்லை என்பதையும் உடன் கவனிக்கத் தயங்குவதில்லை, காரணம் - பதிவிடாதவர்களுக்கு ஏதோ துயரம் அல்லது சம்பவம் நடந்திருக்கும் என்ற ஊகம் தான். சுருக்கமாகச் சொல்வதென்றால். சமூக ஊடக வாசிப்பு என்பது அன்றாடம் செய்தாக வேண்டிய கடமைகளில் ஒன்றாகி விட்டது. அதிலும் குறிப்பாக, அடுத்தவர்களுடைய அந்தரங்கத்தைப் பார்ப்பதில் பேரவா ஏற்பட்டுவிட்டது. தெரிந்தவர்கள் மட்டுமல்ல, தெரியாதவர்களுடைய வாழ்க்கை விவரங்களும்கூட அதே ஆர்வத்துடன் தான் பார்க்கப்படுகின்றன. ஒருவருடைய பதிவு நல்லதா கெட்டதா என்பது கூட இரண்டாம் பட்சமாகிவிட்டது. அதை எத்தனை பேர் பார்க்கின்றனர். எத்தனை பேர் எப்படியெல்லாம் விமர்சிக்கின்றனர் என்று பார்த்து. அதிக வரவேற்பு என்றால் பொறாமைப்படுவது அல்லது வாய்விட்டுப் பாராட்டுவது என்ற நிலைக்குச் சென்றுவிட்டது.

இவர்கள் இவ்வாறு அதிகப் பதிவுகளைப் பகிர வேண்டும் அதிக Likes,commentsஐ பெற வேண்டும் என்று நினைப்பதற்கான காரணம் என்ன? பிரபலம் எனும் பசியேயாகும்.

சமூக ஊடகங்கள் வளர வளர, தகவல்களைத் தெரிந்து கொள்ளும் பசியும் பெருத்துவிட்டது. உங்களுடைய நண்பர் கல்லூரியில் இன்று என்ன செய்தார். டென்மார்க்கில் இருக்கும் உறவுக்காரர் என்ன செய்கிறார் என்று சாதாரணத் தகவல்களைத் தெரிந்துகொண்ட காலம் மலையேறிவிட்டது. இப்படிப் பார்ப்பவர்களின் தேவை அறிந்து, ‘தொழில்முறை’யாகவே காட்சிகளைப் பதிவேற்றுகிறவர்கள் அதற்கேற்ற ஆட்கள் சாதனங்கள் கருப்பொருள்களுடன் களமிறங்கிவிட்டார்கள்.

கடையில் என்ன வாங்கினேன். வெளியில் என்ன சாப்பிட்டேன். நண்பனுடன் எப்படி எதற்காகச் சண்டையிட்டேன். எப்படி பிறகு சமாதானமானேன் என்று ஆயிரக்கணக்கான பேர் பார்க்க - பதிவிடுகிறார்கள். இவர்களில் பலர் காதலியுடன். மனைவியுடன் நெருக்கமாக இருக்கும் காட்சிகளைக்கூடக் கூச்சமில்லாமல் காட்டுகிறார்கள். அது மற்றவர்களுக்கும் பார்க்கப் பார்க்கப் பரவசம் அளிக்கும் என்ற பாவனையில், இவற்றைப் பார்த்தாவது மேலும் மேலும் தங்களுக்கு ரசிகர் கூட்டம் பெருகட்டும் என்ற நோக்கத்திலும் இதைச் செய்கின்றனர். யூட்யூபராகவோ டிக்-டாக்கராகவோ ஆகிவிட வேண்டும் என்று பல பாகிஸ்தானியர்கள் விரும் புகிறார்கள். இதற்குக் காரணம். ஆதிகாலத்திலிருந்தே இப்படிப்பட்ட வம்புகளை விரும்பும் சமூகமாக இருப்பது மட்டுமல்ல. சிலருக்கு இதன் மூலம் கைச் செலவுக்குப் பணமும் கிடைக்கிறது. டொலர்கள் கணக்கில் மிகக் குறைவுதான் என்றாலும் பாகிஸ்தானிய ரூபாய் கணக்கில் கணிசமாக இருப்பதாலும் இதற்கெல்லாம் வரிபோட முடியாது என்பதாலும் ஆர்வமாகப்பதிவிடுகிறார்கள். அக்கம் பக்கத்தில் இல்லாவிட்டாலும் சமூக ஊடக வட்டாரத்தில் பிரபலமாகிவிட முடிகிறது என்பதாலும் பலரும் இதை விரும்புகின்றனர்.

(புதன்கிழமை தொடரும்...)

பிரித்தானியாவில் தமிழ்த்தொண்டர்கள் வரிசையில் முன்னணி வகிக்கும்

# முத்தமிழ்க் கலை வித்தகர் புலவர் சிவநாதன்











புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து வரும் மக்கள் மத்தியில் தமிழுக்காகப் பணி செய்கின்றவர்களைத் தேடிப்பார்த்தால் ஒரு சிலரைச் சந்திக்க முடியும். அவ்வாறு சந்திக்கக் கூடியவர்களிடம் அவர்களின் தமிழ்ப்பணி பற்றிக்கேட்டால் மிகச்சில விடயங்களைத் தெரியப்படுத்துவர். ஆனால், தமிழுடன் வாழ, தமிழராக வாழ விரும்புகின்றவர்களாக அவர்கள் இருக்கிறார்களா என்றால், அதிலும் மிகச் சொற்பமானவர்களையே நாம் அடையாளம் காண முடியும்.

பிரித்தானிய தேசத்தில் விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய தமிழ்ப்பணியாளர்கள், தமிழ் ஆற்றலாளர்கள் என்ற வரிசையில் மேலெழுந்து முன்னிற்கக்கூடியவராக விளங்குபவர் புலவர் நல்லதம்பி சிவநாதன் அவர்கள்.

இவருக்கான மிகச்சிறந்த முகவரி, “நமோ நமோ தாயே... நம் சிறிலங்கா...” என்ற இலங்கை தேசிய கீதத்தைத் தமிழில் வடித்தவரான முதுதமிழ் புலவர் நல்லதம்பி அவர்களின் புதல்வர் புலவர் சிவநாதன். முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி அவர்கள் விவேகானந்தர் அவர்களின் நட்புக்குரியவராக விளங்கியவர்.

நாட்டுக்கூத்துக்குப் புகழ்பெற்ற ஈழத்தில் வட்டுக்கோட்டையைப்பூர்வீகமாகக் கொண்ட புலவர் சிவநாதன் தனது ஊரிலேயே நாட்டுக்கூத்துக்கள், நாடகங்கள் நிகழ்த்தியுள்ளார்.

கல்லூரிக் கல்வியை நிறைவு செய்து ஆசிரியராக முதற்பணியை ஆரம்பித்தார். கிளிநொச்சி மகாவித்தியாலத்தில் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கிய இடத்தை மிகவும் நேசித்து, அங்கே கல்வி கற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மிகவும் பரிவுடன் கல்வியை ஊட்டியவர் புலவர் சிவநாதன். ‘ஆசிரியப்பணி அமிர்தமான பணி’ என்று இப்பொழுதும் அவர் கூறுவார். ஆசிரியப் பணி அன்றைய காலகட்டத்தில் வருமானத்துக்காக ஆற்றிய பணி அல்ல. அது ‘குரு’ தன்மை கொண்டது. தாங்கள் கல்வி கற்ற காலத்திலிருந்த குரு சிஷ்ய முறை பற்றி புலவர் அழகழகாக விளக்குவார். கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியப் பணி புரிகின்ற பொழுதுதான் அதிகமாகக் கவிதைகள் எழுதவும், நாடகங்கள் எழுதவும் இயக்கவும் மேடையேற்றவும் முடிந்தது என்று இப்பொழுதும் பெரு மகிழ்வுடன் கூறுவார்.

கற்பித்தல், படிப்பித்தல், கற்றுணர்தல் இவை ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. புலவர் சிவநாதன் கற்றுணர்தல் பணியை மேற்கொண்டதாகக் கூறி மகிழ்கிறார்.

பார்வையில் கவி, பேச்சில் கவி, எழுத்தில் கவி, மேடையில் கவி, வானொலி, தொலைக்காட்சி, வலையொளி என யாவற்றிலும் கவியாக நிற்பவர், ஒலிப்பவர் புலவர் சிவநாதன்.

ஆனால், ஆற்றல், ஆளுமைகளுக்கப்பால் எப்பொழுதும் தன்னை ஒரு சாதாரண மனிதனாகவே பார்க்கின்றார். மானுடத்தை மனித தர்மத்தை நேசிக்கின்ற ஒருவராகவும், மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவராகவும், தன்னுடன் சார்ந்தவர்கள், சந்திப்பவர்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒருவராக இவர் விளங்குகின்றார். இவருடன் சேர்ந்தவர்கள் பிரிந்ததில்லை. பிரிட்டன் நாட்டில் இவர் காலடி பதித்த காலங்களில் இங்கு மிகக் குறைவானவர்களே தாயக, தமிழ் உணர்வுகளுடன் வாழ்ந்தார்கள். பின்னர் படிப்படியாக வந்து சேர்ந்தவர்களில் ஆற்றல் மிக்க பலரைப் புலவர் சிவநாதன் கண்டு கொண்டார். அவர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டார். நான்கு தசாப்தங்கள் தாண்டியும், முதுமை நிலை அடைந்திருக்கின்ற பொழுதிலும், புலவரை நேசிப்பதை அவர்கள் நிறுத்தி விடவில்லை. புலவரும் அவர்களை வாஞ்சையுடன் அரவணைத்தவண்ணமே திகழ்கின்றார்.

அன்பை நாடுவது, பாசத்தைத் தேடுவது என்பவை புலவரின் குணவியல்புகளாக இருப்பதால் ‘அன்பே தமிழ் அதிலே அமிழ்’ என அனைவரையும் அரவணைத்துக் கொள்கிறார்.

எப்பொழுதும் தந்தையின் ஆளுமை தன்னுள் உள்ளது என்று கூறும் புலவர் சிவநாதன் பராசக்தியின் பக்தனாக இருக்கிறார். அவர் வடிக்கும் வரிகள் யாவும் பராசக்தி தருவது என்று கூறிக்கொள்வார்.

புலவர் சிவநாதன் எழுத்துப்பணி ‘பங்கை மணாளன்’ என்ற புனைபெயரில் ஆரம்பமானது. ‘குமுறல்’ என்ற கவிதைப்புத்தகம் ஒன்றை எழுதியிருந்தார்.

கவிதைத்துறையில் ஈடுபட்ட ஒரு கவிஞன் கவியரங்கம் காணாமல் இருக்க முடியுமா? புலவர் சிவநாதன் இளமைப்பருவத்தில் உணர்ச்சிக்கவிஞர்

காசி ஆனந்தன் அவர்கள் தலைமையில் கவியரங்கத்தில் பங்கேற்றார். இப்பொழுது வரை உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் புலவர் சிவநாதன் அவர்களின் ஆக்கங்களைப் படித்துப்பாராட்டி வருகிறார்.

இவர் இளைஞனாக இருக்கும் பொழுது ‘நம்நாடு’ பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

‘நம்நாடு’ பத்திரிகையினூடாகப் பல ஆற்றலாளர்களை எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தினார். எழுபதுகளின் முற்பகுதியில் தாயகத்தை விட்டுப்புறப்பட்டு பிரிட்டனுக்கு வந்துவிட்டார்.

இவரது தொடர்ச்சியான கற்கை இவரை ஒரு பொறியியலாளராக்கியது.

தொழில் ஒரு புறத்தில் என்றால் தொண்டு இன்னொரு புறத்தில். ஆம் புலவர் சிவநாதனின் தமிழ்த் தொண்டு பிரிட்டனில் தொடர்ந்தது.

பேரன் புலவர். தந்தை புலவர். இவரும் புலவரானமை தமிழ்த்தாயின் செயல். இந்தத் தமிழ் மகன் தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றி மகிழ்கிறார்.

புலவர் சிவநாதன் கவி அளிக்கை செய்தால் அந்த அரங்கமே அக்கவி அளிக்கையால் கவரப்பட்டுவிடும். தாய் மண்ணையும் தமிழையும் பாடுவதில் இவர் தனியிடம் வகிக்கின்றார்.

இவரது எழுத்துக்கள் நூல்களாகின, நாட்டிய நாடகங்கள் ஆகின. ‘காவியச் சலங்கைகள்’ நாட்டிய நாடகம். ‘பிரபஞ்ச லீலைகள்’ நாட்டிய நாடகம். இவரது நாட்டிய நாடகங்களுக்கு உயிர்கொடுத்தவர் லண்டன் நர்த்தன கலாலயா இயக்குநர் திருமதி பத்மினி குணசீலன். இவரது நாட்டிய நாடகம் தமிழ்நாட்டிலும் அரங்கேற்றப்பட்டுப் புகழீட்டியது. ‘பிரபஞ்ச லீலைகள்’ தமிழ்நாட்டில் இலக்கியத்துறை சார்ந்தவர்களாலும், பேராசிரியர்களாலும், பத்திரிகைகளாலும் பாராட்டப்பட்டமை பெருமைக்குரியது.

தமிழ்நாடு அரசின் பாராட்டு, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் புலவர் சிவநாதன் அவர்களை அழைத்து மாண்பேற்றியது.

உலகத் தமிழ்ச்சங்கம் ‘முத்தமிழ்க் கலை வித்தகர்’ பட்டமளித்தது.

வில்லிபுத்தூர் செந்தமிழ் அறக்கட்டளை, ‘கவிப் பேரொளி’ பட்டமளித்தது. இவர் எழுதிய நூல்களில் ஒன்று ‘சத்தியம் சாகாது’. ‘சத்தியம்’ என்ற சொல்லை உயிர்ப் பொருளைக் குறிப்பதாக நம்பிக்கை வைத்துள்ளார்.

அவரது நூலின் முன்பகுதியை அலங்கரித்திருக்கும் கவி வரிகளை வாசகர்களும் சுவைப்பதற்காக இங்கு பதிவிடுகிறோம்.

### சத்தியம் சாகாது

சத்தியம் சாகாது - அது
தீயிலும் வேகாது!
நித்தியமாயிருக்கும் - அது
நீதியின் வழி நடக்கும்!

எத்தரின் கைகளிலே - அது
சிக்கி மடியாது - இடி
எத்தனை வீழ்ந்தாலும் -அதன்
நெஞ்சு கலங்காது!

நெற்றியிற் சுட்டாலும் -
நெரித்து வளைத்தாலும்
கத்தி எறிந்தாலும்- சொட்டு
ரத்தமும் கொட்டாது!

சத்தியம் சாவதில்லை - அதன்
சங்கதி ஒய்வதில்லை !
சத்தியம் வீழ்ந்ததெனும் - கதை
சரித்திரம் கண்டதில்லை!



# ‘நீலநிற சூரியன்’

## பெண்ணாகத் தன்னை உணரும் ஆணின் கதை



திருச்செல்வம் ஜனனி,
ஊடகக் கற்கைகள் துறை,
மூன்றாம் வருட மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.




இந்த மானிட உலகில் யாவும் புதுமை. தமிழ் சினிமாவில் தற்பொழுது பால்புதுமையினர் பற்றிய கதைக்களங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கிறது. அவர்களினை மையப்படுத்திய திரைப்படங்கள் வருகின்றன.

தமிழ் சினிமாவில் திருநங்கை, காஞ்சனா, திட்டம் இரண்டு பாவக்கதைகள், சுப்பர் டிலாக்ஸ், ரஜினி, நியதி பால்புதுமையினர் பற்றிய படங்கள் வரிசையில் தொடர்ந்து சம்யுக்தா விஜயன் இயக்கத்தில், மாலா மன்யன் தயாரிப்பில், ஸ்டீபன் பென்சமின் இசையில் சம்யுக்தா விஜயன், கிட்டி கஜராஜ், கீதா கைலாசம், பிரசன்னா பாலச்சந்திரன் போன்ற பலர் நடிப்பில் 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி வெளியாகிய படம் தான் ‘நீலநிறச்சூரியன்’.

இப்படம் அந்த சமூகத்தினர் இன்றும் எதிர்நோக்குகின்ற இன்னல்கள் அதிலிருந்து மீண்டு வருவதற்கு சமூகத்தோடு போராடும் சவால்களைப் பற்றிப் பேசுகின்றன. அந்த வகையில், தன்னைச்சிறு வயதிலிருந்து பெண்ணாக உணரும் ஒரு ஆணின் உருமாற்றத்தைப் பேசுகிறது ‘நீலநிறச்சூரியன்’ உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் உருவான கதை.

தன்னைச் சிறு வயதில் இருந்து பெண்ணாக உணர்ந்த அரவிந்த் தன்னுடன் பணியாற்றும் சக ஆசிரியை, உளநல வைத்தியர்கள் போன்றோரின் ஆதரவோடு சத்திர சிகிச்சை செய்யப்பட்டு பெண்ணாக (பானுவாக) மாறுகிறார். இவரது உருமாற்றத்தை அவரது பெற்றோர், உறவினர் மற்றும் பணியாற்றும் பாடசாலை சமூகமென இடங்களில் எத்தகைய விளைவுகளுக்கு முகங்கொடுக்கின்றார் என்பதே கதைக்களமாகும்.

அரவிந்த் என்ற இளைஞனாக வீட்டிற்கு ஒரே மகனாக, ஒரு தனியார் பள்ளியில் இயற்பியல் பாடலாசிரியராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் சம்யுக்தா விஜயன். அவருக்கு சிறு வயதிலிருந்தே பெண்ணாக மாற வேண்டும் என்பது ஆசை. பெற்றோருக்குத் தெரியாமல் அதற்கான மருத்துவச் சிகிச்சையையும் மேற் கொண்டுள்ளார். இவ்வாறு தனது அடையாளத்தை மறைத்து வாழும் அரவிந்த் திருமணத்திற்கு வீட்டில் நிர்ப்பந்தம் செய்யவே இந்த சிக்கலிலிருந்து மீண்டு வர, தன்னுடைய அடையாளத்தை வெளிப்படையாகச் சொல்கிறார் பானு.

ஒரு கட்டத்தில் தன்னுடைய ஆசையைப் பள்ளியிலும் தெரிவிக்கிறார். இரண்டு இடத்திலும் எதிர்ப்பு வந்தாலும் தன்னை பெண்ணாக மாற்றி பானு என்ற பெயரையும் வைத்துக் கொள்கிறார்.

பேண்ட், சட்டை அணிந்து பள்ளிக்கு வேலைக்குச் சென்று வந்தவர் திடீரென சேலை அணிந்து பெண்ணாக வேலைக்குச் செல்கிறார். அதனால், பள்ளியிலும், வீட்டிலும் சில சிக்கல்களை எதிர்கொள்கிறார். அதை எப்படிச் சமாளிக்கிறார் என்பதுதான் படத்தின் மீதிக் கதை. ஆரம்பத்தில் அரவிந்த் தன்னை ஆணாகவும், பின்னர் பானு என்ற பெண்ணாகவும் இரண்டு கதாபாத்திரத்திலும் யதார்த்தமாக நடித்திருக்கிறார் சம்யுக்தா விஜயன். அவரும் ஒரு திருநங்கை என்பதால் அந்தக் கதாபாத்திரங்களை அவ்வளவு இயல்பாய் உள்வாங்கி நடித்திருக்கிறார். ஆணாக இருக்கும் போது, ஏற்படும் உணர்வுகளையும், பெண்ணாக மாறிய பின்னர் ஏற்படும் தவிப்புகளை அவர் வெளிப்படுத்தியிருக்கும் விதம் சிறப்பு. அவருக்குள்ளும் ஒரு காதல் வர, ஆனால், அவர் நேசித்தவர் இவரை உணர்வு ரீதியாகப் புரிந்து கொள்ளாமல், உடல் ரீதியாக உறவுகொள்ள ஆசை என்று சொல்வதைக் கேட்டு அதிர்ச்சியடைகிறார். கிளைமாக்சில் உண்மைக்கு மாறாகப் பேச வேண்டிய ஒரு சூழலில் கலங்கி நிற்கும் போது நம்மையும் கலங்க வைத்து விடுகிறார்.

உணர்வு ரீதியாக சிக்கல்களை எதிர்நோக்கும் இவர்களுக்குச் சரியான உறுதுணையும், ஆதரவும் தேவை. அப்படி ஒருவராக சக ஆசிரியையாக ஹரிதா மிகவும் பக்கபலமாக நடித்திருக்கிறார். சம்யுக்தாவின் பெற்றோராக கஜராஜ், கீதா கைலாசம், சிற்றப்பாவாகப் பிரசன்னா பாலசந்திரன் ஆகியோரும் அவரவர் கதாபாத்திரங்களில் சிறப்பாய் நடித்திருக்கிறார்கள். பள்ளியில் உள்ள மற்ற ஆசிரியர்கள், குடும்பத்தினர், மாணவர்கள் என சில காட்சிகளில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்திருப்பவர்கள் கூட அவர்களது கதாபாத்திரங்களை உணர்ந்து நடித்துப் பாராட்ட வைக்கிறார்கள்.

இந்த திரைப்படத்தில் இரண்டு சிறப்பான விடயங்கள், ஒன்று திரைப்படத்தை சம்யுக்தா விஜயன் இயக்கியும் நடித்துள்ளார். மற்றையது ஒளிப்பதிவு, இசை மற்றும் படத்தொகுப்பு ஆகிய மூன்று பணிகளை ஸ்டீவ் பெஞ்சமின், உணர்வினை தூண்டக் கூடிய வகையில் ஒளிப்பதிவு வழங்கியுள்ளார்.

### வலிமிகுந்த தருணங்கள்

பெண்கள் கழிவறையைப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறும் சக ஆசிரியைகள், இதனால் பாடசாலையில் ஒதுக்கப்பட்ட பழைய கழிவறையைப் பாவிக்கும் நிலைமை எனக்குப் பிடித்த நபரிடம் தனது காதலைத் தெரிவிக்கும் நிலையில் அவரின் சுயரூபத்தைப் புரிந்த நிலை.

பாடசாலையில் தன்னை ஒரு ஆணாகவும் பெண்ணாகவும் உணரும் மாணவனுக்கு தன்னால் ஒரு உதவியும் செய்ய முடியாத என்ற ஒரு நிலைமை ஒரு காட்சியில் குழந்தையுடன் இருக்கும் ஒரு பெண்மணி, பானுவை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்கிறார். அதைப் பானு மறுத்தவுடன் அந்தப் பெண் குழப்பத்துடன் பார்க்கிறார். திருநங்கைகள் குறித்த பொதுச் சமூகப் பார்வையை மாற்ற முயல்கிறார் இயக்குநர்.

ஒரு ஆண் தன்னை பெண்ணாக உணர்வதும் அதனை சமூகத்தில் வெளிப்படுத்துவது சாதாரண விடயம் அல்ல என்பதை இயக்குநர் மிக அழகாகத் தனது திரைக்கதையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.



# PAD MAN

## ஒரு பெண் சுகாதார முன்னோடியின் இதயபூர்வமான முயற்சி



உதயகுமார் ரதிகலா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைகழகம்.



இந்திய சினிமாவில் இருந்து வரக்கூடிய படங்களில் ஒரு சில படங்கள் சமூகத்திற்கான விழிப்புணர்வை பெற்றுக் கொடுக்கின்றன. அந்த வரிசையில் என்னை மிகவும் கவர்ந்த படமாக 'பேட்மேன்' (*pad man*) அமைந்துள்ளது. இந்த படம் 2018ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனை ஆர்.கே.பால்கி இயக்கியுள்ளார். பிரதான நடிகர்களாக அக்‌ஷய்குமார், சோனம் கபூர், ராதிகா ஆப்தே ஆகியோர் நடித்துள்ளனர். இவர்களை தவிர படத்தில் பல துணை நடிகர்களும் நடித்துள்ளார்கள். 2019ஆம் ஆண்டு நடைபெற்ற 64ஆவது *vimal Elaichi Filmfare* விருதை தன் வசப்படுத்திக் கொண்டது.

இந்தப் படம் பெண்களின் மாதவிடாய் சுகாதார பிரச்சினைகளை மையமாகக் கொண்டு படமாக்கப்பட்டுள்ளது. இதுவொரு கற்பனை கதையல்ல, அருணாச்சலம் முருகானந்தம் என்பவரின் உண்மையான வாழ்க்கை வரலாற்றை இவ்வாறு படமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்த அருணாச்சலம் முருகானந்தம் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தியவர். அவர் கண்டுபிடித்த புதிய நாப்கின்கள் தயாரிக்கும் இயந்திரம் மூலமாக மாதவிடாய் சுகாதாரம் மிகவும் குறைவாக இருக்கும் இந்தியாவின் கிராமப்புறங்களிலும் எல்லை கிராமங்களிலும் ஆயிரக்கணக்கான பெண்களுக்குப் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சுகாதார வாழ்வைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இவர் இந்த படத்தில் வருவதைப் போன்று தன்னுடைய மனைவியின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டுதான் ஏனைய பெண்களினுடைய பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு கொண்டார். இது இந்தியாவில் தமிழ்நாட்டில் இடம் பெற்றாலும் இதனை இயக்கிய ஆர்.பால்கி தனது படத்தை இந்தி பேசும் பார்வையாளர்களைக் கவரும் வகையில் மத்தியப் பிரதேசத்தில் அமைக்கின்றார். இதில் பிரதான கதாபாத்திரமாக நடித்த அக்‌ஷய்குமாரின் புதியதொரு பரிமாணமாகவும் இந்த படம் அமைந்துள்ளது.

இந்தப் படத்தின் முக்கியமான பேசு பொருளாக மாதவிடாய் சுகாதாரம் காணப்படுகின்றது. இரு தங்கைகள் அம்மா என வாழும் அக்‌ஷய்குமாருக்கு திருமணம் நடக்கிறது. திருமணம் முடிந்த பின் தன் மனைவி மீது எல்லையில்லா அன்பையும் அக்கறையையும் பொழிகிறார். அக்‌ஷய்குமார் தனது மனைவி எந்த விதத்திலும் கஷ்டப்படக் கூடாது என நினைக்கிறார். வீட்டில் சாதாரணமாக வெங்காயம் வெட்டுவது கூட கடினம் என்று அதற்காகப் பிரத்தியேகமாக ஒரு இலகுவாக வெங்காயம் வெட்டக்கூடிய இயந்திரம் ஒன்றைத் தயார் செய்து கொடுக்கிறார். திருமணமாகி அடுத்த மாதம் மனைவிக்கு மாதவிடாய் காலம் ஆரம்பிக்கிறது. பொதுவாகவே மாதவிடாய் குறித்து எல்லா சமூகங்களிலும் ஒவ்வொரு கருத்துக்கள் மூட நம்பிக்கைகள் காணப்படும். இவ்வாறு அக்‌ஷய்குமாரின் வீட்டில் மாதவிடாய் காலங்களில் பெண்கள் வீட்டிற்குள் நுழையக் கூடாது அந்த காலம் முடியும் வரைக்கும் தங்குவதற்கு என வீட்டிற்கு வெளியே ஒதுக்குப்புறம் காணப்படுகின்றது.மாதவிடாய் காலத்தில் குடும்ப சடங்குகளில் பெண்கள் கட்டாயமாகக் கலந்து கொள்ளக்கூடாது. அந்த 5 நாட்களுக்கும் பாடசாலை செல்லும் இளம் பெண்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை, இதனால் ஒவ்வொரு மாதமும் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான சமயங்களில் பெண்கள் தூய்மையற்றவர்களாகப் பார்க்கப்படுகின்றார்கள். எனவே, இவ்வாறான கலாசார கட்டமைப்பு கொண்ட ஒரு கிராமத்தில் தான் அவர்கள் வசிக்கின்றார்கள். அவரின் மனைவி குறித்த ஐந்து நாட்களும் வீட்டிற்கு வெளியே தங்குகிறாள், இதெல்லாம் ஒரு மூடநம்பிக்கை என அக்‌ஷய்குமார் தனது மனைவியை உள்ளே வரும்படி அழைக்கிறார். ஆனால், அவள் வர மறுக்கிறாள், அப்போது ஒரு அழுக்கான துணி கீழே கிடக்கிறது. அதனை எடுத்து வீசு முயன்றபோது, மனைவி அதனைப் பிடுங்கி தன் சேலையால் மூடி மறைக்கிறாள். அப்போதுதான் அக்‌ஷய்குமாருக்கு காரணம் புரிகிறது இங்கேதான் படத்தின் பிரச்சினையையும் தொடங்குகிறது.

அவர் தனது மனைவி கஷ்டப்படக் கூடாது என்பதற்காக நாப்கின்கள் வாங்க செல்கிறார். ஆனால், விலை ஐம்பத்தைந்து ரூபாய் அவரிடம் இருப்பதோ, நாற்பது ரூபாய் இருந்தாலும் கடன் வாங்கியாவது வாங்கி விட வேண்டும் என்ற நோக்கத்தில் அதனை வாங்கி மனைவியிடம் அதனை கொண்டு போய் கொடுக்கிறார். அவள் அதனை வாங்க மறுக்கிறாள்.

"ஒரு மாதம் இவ்வளவு செலவு செய்தால் உனது சம்பளமே இதற்கு போதாது" என கூறுகிறாள். அப்போதுதான் அவருக்குக் குறைந்த விலையில் பெண்களுக்கான சுகாதார நாப்கின்களை உருவாக்க வேண்டும் என்ற முனைப்பு ஏற்படுகிறது.

'*PAD MAN*' என்பது வலிமையான திரைப்படம். ஆகவே, அனைவரும் விரும்பத்தக்க வகையில் கதை நகர்த்தப்பட்டுள்ளதால் அது தனக்கான வெற்றியைக் கண்டுள்ளது. பழைய துணிகளைப் பயன்படுத்துவதால் பெண்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் வரும் என்பதை அறிந்து கொண்ட சாதாரண மனிதன், எவ்வாறு சுகாதார நாப்கின்களை பல தடைகளைத் தாண்டி உருவாக்குகிறான் என்பதே படத்தின் கருவாக அமைந்துள்ளது. இந்த படத்திற்கு அமித் திரிவேதி இசையமைத்துள்ளார். ஒரு சாதாரண நுகர்வோர் பெரும் பொருள் எவ்வாறு இந்தியா போன்ற நாடுகளுக்கு வரும்போது, அது அதிக விலைகள் கொடுத்து வாங்கக்கூடிய நுகர்வு பொருளாக மாறுகிறது என்பதும் இங்கே மறைமுகமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. படத்தின் சௌஹான் கதாபாத்திரத்தில் நடித்த அக்‌ஷய்குமார் மிகவும் துணிச்சலான மற்றும் பொறுப்பு மிக்க சவாலான கதாபாத்திரத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். இன்றைக்கு வரையிலுமே இந்தியா இலங்கை போன்ற கலாசார கட்டமைப்புக்குள் இருக்கின்ற நாடுகளில்
பேசத் தயங்கும் ஒரு விடயம் இன்று அந்த திரைப்படம் மூலமாகப் பேசப்பட்டுள்ளதால் இது அந்த படத்தினுடைய உண்மையான வெற்றியாகக் காணப்படுகின்றது.

சமூகத்தில் பெண்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் சேவை நோக்கோடு இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. படத்திற்குள்ளே ஒரு மெல்லிய காதல் இழையோடுகிறதை அவதானிக்கலாம். இதில் ராதிகா ஆப்தே தனது கதாபாத்திரத்தை மிகவும் சிறப்பாக நடித்துள்ளார். இந்த படம் மாதவிடாய் பற்றிய அனைத்து தப்பெண்ணங்களையும் அகற்றுவதற்கான ஒரு சக்தி வாய்ந்த செய்தியை சமூகத்திற்கு வழங்குகிறது. இந்த படத்தில் அக்‌ஷய்குமார் உயரிய நடிகன் என்பதையும் நிரூபித்துள்ளார். பெண்களுக்கான சௌகரியமான உயர்தரமான சுகாதார நாப்கின்களை உருவாக்கப் பெரிதும் பாடுபடுகிறார். தன் மனைவி உபயோகப்படுத்தி அது எவ்வாறு செயற்படுகிறது என்பதைக் கூறாததால் அதனைத் தானே பயன்படுத்திப் பார்க்கிறார். தங்கள் கைவசம் இருக்கும் மூலப்பொருட்களையும் இயந்திரங்களையும் பயன்படுத்தி நமக்கான பொருட்களை நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்ற கருத்தையும் முன்வைக்கிறது இந்த படம்.

அருணாச்சலம் முருகானந்தனுக்கு பாடசாலை காலத்தில் தனக்குக் கற்பித்த ஆங்கில ஆசிரியர் மீது ஒரு ஈர்ப்பு காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் அதனால் இயக்குநரான ஆர்.பால்கி படத்தினுள் ஒரு ஆங்கில அறிவுள்ள நகரப் பெண்மணியை உள்ளே கொண்டு வருகிறார். நடிகன் தனது இலக்கை அடைய அவள் உதவி செய்கிறாள். அவள் அவனின் உத்வேகத்தையும் விடாமுயற்சியையும் அறிவுக் கூர்மையையும் நன்றாக அவதானித்த பின்னர் அவள் தன்னாலான எல்லா உதவிகளையும் கதாநாயகனுக்கு செய்கிறாள். மருத்துவ நாப்கின்களை கண்டுபிடித்த பின்னும் அதனைப் பெண்களிடம் கொண்டு போய் சேர்க்க முடியாமல் போகும்போது, அவளாகவே தானாக முன்வந்து அதனை இரண்டு ரூபாய்க்கு பெண்களிடம் கொண்டு போய் சேர்க்க உதவுகிறாள்.

அதுமட்டுமல்லாமல், இது ஒரு உண்மை கதையை வைத்து படமாக்கப்பட்டுள்ளதால் நிஜமாகவே படத்தில் வருவது போன்று இந்தியா முழுவதும் சுகாதார நாப்கின்களை உற்பத்தி செய்து மிகக் குறைந்த விலைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல, பல பெண்களுக்கு இதன் மூலமாக வேலை வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள். இன்று பெரும்பாலான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள பெண்களுக்கு மாதவிடாய் சுகாதார தயாரிப்புகளை அணுகுவதே முதன்மையான பிரச்சினையாக இருந்து வருகின்றது. ஆகவே இந்த மாதிரியான அனைத்து பிரச்சினைகளையும் உள்வாங்கிக்கொண்டு வெளிவந்த சிறப்பான படமாக *PAD MAN* அமையப் பெற்றுள்ளது.

# சிலம்பாட்டத்தில் சாதித்த நம்மவர்



ரா.மனோஜ்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயத்திடம் நாம் வாழும் பிரதேசத்தில் நாம் சந்தித்த, சந்தித்துக் கொண்டிருக்கின்ற இன்னல்களைத் தாண்டி ஏதோ ஒரு விடயத்தில் சாதிக்க வேண்டும், என்ற எண்ணம் இருக்கின்றது. என்ற விடயம் சர்வதேச மட்டத்தில் சிலம்பாட்ட போட்டியில் சாதனை புரிந்த இளைஞர் ஒருவரை சந்தித்த போது அறிய கிடைத்தது.

நுவரெலியா மாவட்டத்தில், கொட்டக்கலை பிரதேசசபைக்கு உட்பட்ட மவுண்ட் வேர்னன் நடுப்பிரிவு பத்தனை எனும் முகவரியில் திருச்செல்வம் தில்லைராணி ஆகிய இருவரின் மகனான யுவான் என்ற 18 வயது இளைஞன் சர்வதேச மட்டத்தில் பல சாதனைகளை புரிந்து வருகின்ற சாதனையாளர் ஆவார். இவ்வாறான சாதனைகளுக்கு சொந்தக்காரனான யுவானை நேர்காணல் செய்தபோது, அவர் கூறிய விடயங்கள் இளம் தலைமுறையினருக்கு பெரும் உற்சாக ஆர்வத்தை வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

பெருந்தோட்ட பகுதிகளில் பெரும்பாலும் கல்வியினைவழங்குவதற்கேசிரமப்படும்எத்தனையோ பெற்றோர்கள் மத்தியில் நடுத்தர குடும்பத்தில் பிறந்தாலும் ஏதேனும் ஒரு துறையில் தனது மகனை சாதனையாளனாக பார்க்க வேண்டும் என்பது எல்லா பெற்றோர்களினும் கனவும் ஆசையுமாகும். அந்த வகையில், பால் உற்பத்தி தொழிற்சாலையில் தொழில் புரிகின்ற தாயும், விவசாயம் செய்து வரும் தந்தையும் தனக்கு மிகப் பெரிய பக்கபலமாக இருப்பதாக சிலம்பாட்டத்தில் சாதித்த நம்மவர் கூறியிருந்தார். சிலம்பாட்டம் தமிழர்களின் மரபு வழி கலையாக இருந்தாலும், இன்று அதில் இருக்கும் நுட்பங்கள் அதில் இருக்கும் நன்மைகளை மேற்குலக நாடுகள் நன்றாக புரிந்து கொண்டு அவர்கள் பிரத்தியேகமாக அவற்றைப் பயின்று அவர்களது சந்ததிக்கு கடத்திக் கொண்டிருக்கின்றார்கள். என்பதை தெரிவித்தார்.

தரம் ஒன்று முதல் ஒன்பது வரை பத்தனை தமிழ் மகா வித்தியாலயத்திலும் ஒன்பது முதல் தற்பொழுது உயர்தரம் வரை சென் கிளையர் தமிழ் மகா வித்தியாலயத்தில் கலைப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் திருச்செல்வம் யுவான் தனக்கு 13 வயதாக இருக்கும் போது, தனது தந்தையின் வழிகாட்டலின் கீழ், மிகவும் ஆர்வத்துடன் சிலம்பாட்ட கலையினை பயில்வதற்குத் தனது பயிற்சியாளரான திவாகர் மாஸ்டரிடம் சேர்த்து விடப்பட்டுள்ளார்.

பழகுவதில் ஆர்வமாகவும் விரைவான

உள்வாங்கும் திறனாலும் கடுமையான பயிற்சியின் மூலம் பயிற்சியில் இணைந்த அடுத்த வருடத்தில் பல பதக்கங்களைத் தனதாக்கினார் யுவான். தனது பயிற்சியாளரிடம் சேர்ந்தது முதல் இப்பொழுது வரை தொடர்ச்சியான பயிற்சியும் தனது விடாமுயற்சியும் தனது வெற்றிக்குக் காரணமாக அமைகின்றதாக அவர் உறுதியோடு தெரிவிக்கின்றார். திறமைகள் அதிகம் தன் வசம் இருப்பவர்கள் அதிகமாகப் பேசமாட்டார்கள் என்பது போல, அவரிடம் மேலும் என்னென்ன திறமைகள் இருக்கின்றது என்று கேட்டபோது, அவர் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர் மட்டுமின்றி, சிலம்பாட்டத்தோடு இணைந்து கராத்தே போட்டிகளிலும் களம் கண்டவர், மற்றும் வருடா வருடம் இடம்பெறவிருக்கும் எல்லா சாம்பியன்சிப் போட்டிகளுக்கும் தான் தயாராகி வருவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதனைத் தொடர்ந்து, தென்னாசிய வலய நாடுகளுக்கு இடையிலான போட்டிகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டுவதற்கு கடுமையான பயிற்சிகளை மேற்கொள்வதாகவும் கூறியிருந்தார். அவர் பெற்ற விருதுகள் தொடர்பில் கேட்ட போது, 20க்கும் மேற்பட்ட சான்றிதழ்களையும், பத்துக்கு மேற்பட்ட பதக்கங்களையும் தன்வசம் வைத்திருக்கின்றார். இது சிலம்பாட்டத்தில் மட்டும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். 2023 ஜூன் மாதம் இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச சிலம்பாட்ட சம்மேளனம் நடத்திய சர்வதேச சிலம்பாட்ட போட்டியில் 10 நாடுகள் போட்டியிட்டன இதில் மூன்று பிரிவுகளில் 3 பதக்கங்களை வென்று நாட்டிற்கும் நம் மண்ணிற்கும் பெருமை சேர்த்த யுவான் இன்னும் பல தேசிய மட்ட போட்டிகளிலும் பிரதேச போட்டிகளிலும் தனது திறமையை நிலை நாட்டியுள்ளார்.

மேலும், தனது எதிர்கால திட்டம் என்ன என்பது பற்றிக் கேட்டபோது, தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்பாட்டம் அழிவின் விளிம்பில் இருந்து மீட்கப்பட்டு இன்று சர்வதேச அளவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன என்ற விடயம் மகிழ்ச்சிகரமானதாக அமைந்தாலும், எமது நாடான இலங்கையில் மலையக பிரதேசத்தில் மட்டும் இவ்வாறான பயிற்சிகள் இருப்பதாகவும் பெரிதாக இளைஞர்கள் மத்தியில் இவ்வாறான விளையாட்டுகளைப் பயில்வதற்கான ஆர்வம் குறைவாக இருப்பதும் கவலையளிப்பதாகத் தெரிவிக்கின்றார். ஒரு சர்வதேச வீரர் என்ற வகையில் நீங்கள் சந்தித்த சவால்கள் பற்றி அறியமுடியுமா? என்று கேட்ட பொழுது, சவால்கள் இன்றி சாதிக்க முடியாது என்பதில் தெளிவாக இருக்கின்றார். சவால்களை எல்லாம் தாண்டி விடாமுயற்சியோடு பயணிக்கும் போது நிச்சயம் வெற்றி நம்மைச் சேரும் என்று அவர் பேசிய அந்த நொடிகள் மூலம் தெளிவானது. எதிர்காலத்தில் சிலம்பம் மற்றும் கராத்தே ஆகிய இரண்டு விளையாட்டுக்களிலும்








கற்கையை டிப்ளோமா நிறைவு செய்ய வேண்டும் எனவும் வளர்ந்து வரும் என்னைப் போன்ற இளைய சமுதாயத்தினர் இவ்வாறான விடயங்களில் அதிகம் நேர முகாமைத்துவம், முறையான திட்டமிடல் என்பன மூலம் நான் எனது பயிற்சிகளையும் கல்வி நடவடிக்கைகளையும் சமமாகவே கொண்டு செல்கின்றேன் என்று குறிப்பிடுகின்றார். சர்வதேச போட்டிகளுக்குச் செல்லும் காலங்களில் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் மிகவும் உறுதுணையாக இருந்து எனது கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுவதாகக் குறிப்பிடுகின்றார்.

இறுதியாக சிலம்பாட்டம் தமிழர்களின் மரபு வழி கலையாக இருந்தாலும், இன்று அதில் இருக்கும் நுட்பங்கள், அதில் இருக்கும் நன்மைகளை மேற்குலக நாடுகள் நன்றாகப் புரிந்து கொண்டு அவர்கள் பிரத்தியேகமாக அவற்றைப் பயின்று அவர்களது சந்ததிக்குக் கடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எமது பூர்வீகக் கலைகளை நாம் எந்த அளவு பாதுகாக்க அல்லது அதனைப் பயின்று கொள்ள ஆர்வம் காட்டுகின்றோம் என்பது கேள்விக்குறியாகத் தான் இருக்கின்றது என்றும் இந்த நிலை மாற வேண்டும் அனைவரும் இவ்வாறான கலைகளைப் பயில வேண்டும். ஏதேனும் ஒரு துறையில் நம்மை நிரூபித்து நமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான சாதனையாளர்கள் எத்தனையோ பேர் எம் மத்தியில் சத்தமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் சத்தமில்லாமல் வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள் எத்தனையோ விடயங்களை சமூக ஊடகங்களிலும் ஊடகங்களிலும் பிரபல்யப்படுத்தும் வெகுசன ஊடகங்கள் இவ்வாறான திறமைகளை ஏன் கண்டு கொள்வதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். அதுமட்டுமல்ல, தனது திறமையை மேலும் வளர்த்துக்கொள்ள அதன் மூலம் தனது பிரதேசத்திற்கும் நாட்டிற்கும் பெருமை தேடித் தர காத்துக் கிடக்கும் இவர் போன்ற இளைஞர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டியது ஊடகங்களினதும் அரசாங்கத்தினதும் கடமையாகும். அவர் வாழும் பிரதேசத்தில் அவர் போன்ற இன்னும் எத்தனையோ திறமைசாலிகள் இலைமறைகாய்களாக இருக்கலாம். அவர்களெல்லாம் வெளிவர அவர்களுக்குத் தேவைப்படும் வளங்களை உரியத் தரப்பினர் ஏற்படுத்திக் கொடுப்பார்களாயின் எம் சமூகம் மூலம் மேலும் இந்த நாடு பெருமையடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

வயநாடு



முதன்முறையாக தேர்தலில்

# குதிக்கும் பிரியங்கா

வயநாடு மக்களவை தொகுதிக்கான இடைத்தேர்தல், நவம்பர் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் காங்கிரஸ் கட்சி சார்பில் பிரியங்கா காந்தி களம் இறக்கப்பட்டுள்ளார். முதன்முறையாக பிரியங்கா காந்தி தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

அவருக்கு ஆதரவாக அவரது தாயாரும் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான சோனியா காந்தி தேர்தல் பிரசார நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளார்.

பலவருடங்கள் கழித்து பிரியங்கா காந்திக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள சோனியா காந்தி கேரளாவுக்கு வர இருப்பதாக, மாநில காங்கிரஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை(22), பிரியங்கா காந்தி, ராகுல் காந்தி மற்றும் சோனியா காந்தி ஆகியோர் வயநாடு தொகுதியில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வயநாட்டில், பிரியங்கா காந்தியை சுமார் 5 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என காங்கிரஸ் தலைவர்கள் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி


பாடசாலையில் வெடிப்பு சம்பவம்:

# காலிஸ்தான் அமைப்பு பொறுப்பேற்றது

புதுடெல்லி - ரோகினி செக்டார் பகுதியில் உள்ள சிஆர்பிஎஃப் பாடசாலையில், ஞாயிற்றுக்கிழமை (20) காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு, காலிஸ்தான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

பாகிஸ்தானில் 'ஜஸ்டிஸ் லீக் இந்தியா' என்ற பெயரில் இயங்கும் டெலிகிராம் பக்கத்தின் ஊடாகவே, அவ்வமைப்பு இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

அந்த பதிவில், டெல்லி குண்டுவெடிப்பு வீடியோ பதிவேற்றப்பட்டுள்ளது.




அத்துடன், கீழே 'காலிஸ்தான் ஜிந்தாபாத்' என்ற குறியீடும் பதிவிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, "இந்திய கோழை ஏஜன்சியும் (Indian coward agency) அதன் எஜமானர்களுக்கும் நமது உறுப்பினர்களை (காலிஸ்தான் ஆதரவாளர்களை) அமைதிப்படுத்த, நமது குரலை நசுக்க கேடுகெட்ட ரவுடிகளை பணம் கொடுத்து ஏற்பாடு செய்யலாம் என்று நினைக்கின்றனர்.

அப்படி நினைத்தால் அவர்கள் முட்டாள்களின் உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் என்று அர்த்தம். நாம் அவர்களுக்கு எவ்வளவு நெருக்கத்தில் இருக்கிறோம் என்றும் நம்மால் என்ன செய்ய முடியும் என்றும் அவர்களால் கற்பனை கூட செய்துபார்க்க முடியாது. நம்மால் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்த முடியும்" என அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"நிஜ்ஜார் கொலைக்கும் எனக்கும்

# எந்த சம்பந்தமும் இல்லை"



நிஜ்ஜார் கொலைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என கனடாவுக்கான இந்திய தூதுவர் சஞ்சய் வர்மா தெரிவித்தார்.

கனடாவில் வசித்து வந்த சீக்கிய பிரிவினைவாத காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டினார்.

இதற்கிடையே, நிஜ்ஜார் கொலையில் இந்திய அரசு அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், சஞ்சய் வர்மா கனடாவின் செய்தி தொலைக்காட்சி ஒன்றாக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், " நிஜ்ஜார் கொலை தொடர்பாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த குற்றச்சாட்டுகள் உறுதியான ஆதாரத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டதல்ல. கனடா உளவுத்துறை தெரிவித்த தகவலின் படியே அந்தக் குற்றச்சாட்டை அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, "இதை அவரே சமீபத்தில் ஒப்புக்கொண்டார். அவரின் குற்றச்சாட்டு அரசியல் உள்நோக்கம் கொண்டது. இந்தியா, கனடா இடையிலான உறவை அவர் தகர்த்துள்ளார். நிஜ்ஜார் கொலைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" எனவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா

மன்னர் சார்ளஸ் வருகையால்

# அவுஸ்திரேலியா பாராளுமன்றத்தில் பரபரப்பு



அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து மன்னர் சார்ளஸுக்கு எதிராக பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குரல் எழுப்பியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சார்ளஸ், திங்கட்கிழமை (21) காலை அவுஸ்திரேலிய பாராளுமன்றத்துக்கு சென்றார். அப்போது, அவுஸ்திரேலியாவும் பூர்வீக சமூகத்தைச் சேர்ந்த பெண் எம்.பியான லிடியா தோர்ப் என்பவர், மன்னர் சார்ளஸ்க்கு எதிராக குரல் எழுப்பியுள்ளார்.

"இது உங்கள் நிலம் கியைாது, நீங்கள் என்னுடைய மன்னர் கிடையாது. மீண்டும் எங்கள் நிலத்தை கொடுங்கள். எங்களிடம் இருந்து கொல்லையடித்து சென்றதை எங்களிடமே கொடுங்கள்" என முழக்கமிட்டுள்ளார்.

அத்துடன், "ஐரோப்பிய குடியேறிகளால் பூர்விக அவுஸ்திரேலியர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர்" என லிடியா தோர்ப் கூறினார். அதனால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. பின்னர், குறித்த எம்.பி. பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

அமெரிக்கா

சிப்ஸ் பொறிக்க

# ட்ரம்புக்கு கற்றுக்கொடுத்த ஊழியர்

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்களான டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் ஆகியோர், கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவது என்பதை தீர்மானிப்பதில் முக்கிய பங்குவகிக்கும் மாநிலங்களில் தங்களது ஆதரவாளர்களை ஒன்று திரட்டி பிரசார, மக்கள் சந்திப்புகளை நடத்தி வருகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை(20), பென்சில்வேனியாவில் வாக்காளர்களுக்காக ட்ரம்ப் தனது மக்கள் சந்திப்பை மேற்கொண்டார். அதேநேரத்தில், கமலா ஹாரிஸ் ஜோர்ஜியாவில் மக்கள் சந்திப்பை மேற்கொண்டார்.

பிலடெல்பியாவின் புறநகர்ப் பகுதியில் உள்ள மெக்டொனால்ஸுக்கு (McDonald's) விஜயம் செய்த ட்ரம்பிற்கு, அங்குள்ள ஊழியர் ஒருவர், சிப்ஸ் தயாரித்து பொதியிடுவது எப்படி என்று கற்றுகொடுத்துள்ளார்.

"அதை விரைவாகச் செய்வதற்கு உண்மையில் சிறந்த நிபுணத்துவம் தேவை" என்ற ட்ரம்ப், தனது கோட் சூட்டை கழற்றி விட்டு, சமையலுக்கு அணியும் மேலாடையை அணிந்து, "எனக்கு இந்த வேலை பிடிக்கும்" என்று கூறி சிப்ஸை தயாரித்துள்ளார்.



# மேற்கிந்தியத் தீவுகளை வென்றது இலங்கை

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது போட்டியில் இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பல்லேகலவில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் ஷே ஹோப் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். இலங்கை சார்பாக நிஷான் மதுஷ்க ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், ஆரம்பத் துடுப்பாட்டவீரர்கள் பிரண்டன் கிங், அலிக் அதனஸேயை வனிது ஹசரங்கவிடம் இழந்ததுடன், சிறிது நேரத்தில் ஹோப்பையும் ஜெஃப்ரி வன்டர்சேயிடம் இழந்தது.

பின்னர் கேசி கார்ட்டி 37 (58) ஓட்டங்களுடன் அணித்தலைவர் சரித் அசலங்கவிடம் வீழ்ந்த நிலையில், ஷெர்ஃபேர் ருதஃபோர்ட்டும், றொஸ்டன் சேஸும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில், 38.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டதோடு மேற்கிந்தியத் தீவுகளின் இனிங்ஸ் முடிவுக்கு வந்தது. ருதஃபோர்ட் ஆட்டமிழக்காமல் 74 (82), றொஸ்டன் சேஸ் ஆட்டமிழக்காமல் 33 (33) ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

பதிலுக்கு டக்வேர் லூயிஸ் ஸ்டேர்ன் முறையில் 37 ஓவர்களில் 232 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, ஆரம்பத்திலேயே அல்ஸாரி ஜோசப்பிடம் அவிஷ்க பெர்ணாண்டோ, குசல் மெண்டிஸை இழந்ததுடன், சிறிது நேரத்தில் குடகேஷ் மோட்டியிடம் சதீர சமரவிக்கிரமவையும் இழந்தது.

பின்னர் ஜோடி சேர்ந்த மதுஷ்க, அசலங்கவின் இணைப்பாட்டத்தில் வெற்றியை நோக்கி பயணித்த இலங்கை, மதுஷ்க 69 (54), அசலங்க 77 (71) ஓட்டங்களுடன் மோட்டியின் அடுத்தடுத்த ஓவர்களில் ஆட்டமிழந்தபோதும் கமிந்து மெண்டிஸின் ஆட்டமிழக்காத 30 (21), ஜனித் லியனகேயின் ஆட்டமிழக்காத 18 (18) ஓட்டங்களோடு 31.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இலங்கை அடைந்தது.

இந்தப் போட்டியின் நாயகனாக அசலங்க தெரிவானார்.




ஐக்கிய அமெரிக்க குரான் பிறீ:

# வென்ற லெக்கலெர்க்



ஐக்கிய அமெரிக்க குரான் பிறீயில் பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் வென்றுள்ளார்.

திங்கட்கிழமை (21) நடைபெற்ற இப்பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்து மொனாக்கோவின் லெக்கலெர்க் வென்றதுடன், அவரது சக பெராரி அணி வீரரான கார்லோஸ் சைன்ஸ் ஜூனியர் இரண்டாமிடத்தைப் பெற்றதுடன், நடப்புச் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

பந்தயம் முடிவடைய நான்கு சுற்றுக்கள் இருக்கத்தக்கதாக றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பனை மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் முந்தியபோதும், சுற்றுப்பாதையின் வெளியே சென்றமையால் அவர் நான்காமிடத்துக்கு தரமிறக்கப்பட்டிருந்தார்.

இவ்வாண்டு போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் 354 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் காணப்படுகின்றார். 297 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் பிரித்தானியாவின் நொரிஸும், 275 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லெக்கலெர்க்கும் காணப்படுகின்றனர்.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# செவிய்யாவை மண் கவ்வ வைத்த பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் திங்கட்கிழமை (21) நடைபெற்ற செவிய்யாவுடனான போட்டியில் 5-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவின் வென்றது.

பார்சிலோனா சார்பாக றொபேர்ட் லெவன்டோஸ்கி, பப்லோ டொரே ஆகியோர் தலா இரண்டு கோல்களையும், பெட்ரி ஒரு கோலையும் பெற்றனர். செவிய்யா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸ்டனிஸ் இடும்போ பெற்றிருந்தார்.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

# றோமாவைத் தோற்கடித்த இன்டர்




இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், றோமாவின் மைதானத்தில் திங்கட்கிழமை (21) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் வென்றது.

இன்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை அதன் அணித்தலைவர் லொட்டரோ மார்ட்டினெஸ் பெற்றிருந்தார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# செல்சியை வீழ்த்திய லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற செல்சியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக மொஹமட் சாலா, கேர்ட்டிஸ் ஜோன்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்கொலஸ் ஜக்சன் பெற்றிருந்தார்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 22, ஒக்டோபர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.